விலை: 50.00
பக்கங்கள் - 16

Website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 26

ஒலி 330 வள்ளுவர் ஆண்டு 2056 ஐப்பசி 28 வெள்ளிக்கிழமை (14.11.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829



கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005

இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே


## யாழில் இராணுவ வசமுள்ள காணிகளை விடுவிப்பது தொடர்பில்

### உயர்மட்டக் கலந்துரையாடல்



(யாழ்ப்பாணம்)

யாழில் இராணுவப் பயன்பாட்டில் உள்ள யாழ்ப்பாணம் மற்றும் பலாலிப் பகுதிகளில் உள்ள தனியார் காணிகளை விடுவிப்பதன் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கான 02ஆம் பக்கம் பார்க்க

## தொல்.திருமாவளவன் முள்ளிவாய்க்காலில் அஞ்சலி



15ஆம் பக்கம் பார்க்க

## - சம்பளம் வழங்கப்பட்டு -

# நாட்டில் இனவாதம் பரப்பப்பட்டுள்ளது



### ஜனாதிபதி அநுர தெரிவிப்பு

(கொழும்பு)

அடிப்படைவாதிகளுக்கு மக்களின் வரிப் பணத்தில் சம்பளம் வழங்கப்பட்டு நாட்டில் இனவாதம் பரப்பப்பட்டுள்ளது என ஜனாதிபதி அநுர குமார திசா நாயக்க தெரிவித்துள்ளார். (02ஆம் பக்கம் பார்க்க)

## 'ஐஸ்' வைத்திருந்தவருக்கு ஆயுள் தண்டனை

### மன்னார் நீதிமன்றம் தீர்ப்பு

(மன்னார்)

20 கிராம் (ஐஸ்) போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்தமை மற்றும் வியாபாரம் செய்தமை தொடர்பான வழக்கில், குற்றவாளிக்கு ஆயுள் தண்டனை விதித்து மன்னார் மேல் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. 16ஆம் பக்கம் பார்க்க

### போதை மாத்திரைகளுடன்

## வவுனியாவில் நான்கு இளைஞர்கள் கைது

(வவுனியா)

போதை மாத்திரைகளுடன் வவுனியாவில் நான்கு இளைஞர்கள் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா மாவட்ட 15ஆம் பக்கம் பார்க்க

### வல்வெட்டித்துறையில் தோட்டக்கிணற்றில்

## கயிறு கட்டி நீந்திய இளைஞன் நீரில் மூழ்கி உயிரிழப்பு



(கரணவாய்)

வல்வெட்டித்துறைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கெருடாவில் பண்டிக்கண்டன் பகுதியில் உள்ள தோட்டக் கிணற்றில் கயிறு கட்டி நீந்திய இளைஞர் ஒருவர் கயிறு அறுந்து நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார். 15ஆம் பக்கம் பார்க்க

## வடக்கில் மழை தொடரும்

(கொழும்பு)

வடக்கு மாகாணத்தில் மழையுடனான காலநிலை தொடரும் என வளிமண்டலவியல் திணைக்களம் 15ஆம் பக்கம் பார்க்க

### 50 போதை மாத்திரைகளுடன்

## யாழ்.கலட்டிப் பகுதியில் மூன்று இளைஞர்கள் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கலட்டிப் பகுதியில் 50 போதை மாத்திரைகளுடன் மூன்று இளைஞர்கள் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாண மாவட்டப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு அருகில் கலட்டிப் பகுதியில் மூன்று 15ஆம் பக்கம் பார்க்க

## பல குற்றச் செயல்களுடன் தொடர்புடைய இருவர்

### ஹெரோயினுடன் நாவற்குழியில் கைது

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாவற்குழிப் பகுதியில் பல்வேறுபட்ட குற்றச்செயல்களுடன் தொடர்புடைய இரண்டு இளைஞர்கள் ஹெரோயின் போதைப் பொருளுடன் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சாவகச்சேரிப் பொலிஸ் நிலையப்போதைப்பொருள் மற்றும் குற்றத்தடுப்புப் பிரிவு 15ஆம் பக்கம் பார்க்க

### வரவு - செலவுத் திட்டத்தின்

## இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு இன்று மாலை

### பெரமுன, சஜித் அணி எதிர்த்து வாக்களிக்கும்

(கொழும்பு)

2026ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் தொடர்பில் பாராளுமன்றத்தில் விவாதம் நடைபெற்று வரும் நிலையில், இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு இன்று மாலை இடம்பெறவுள்ளது.

நிதி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி 16ஆம் பக்கம் பார்க்க

## நாடு முழுவதும் சுற்றிவளைப்பு

### 1099 பேர் கைது


(கொழும்பு)

போதைப் பொருள் தடுப்பு நடவடிக்கை தொடர்பாக நாடளாவிய ரீதியாக நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புகளில் 1,099 சந்தேக 15ஆம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருநகர் யாகப்பர் ஆலய படுகொலையின் 32 ஆவது ஆண்டு நினைவேந்தல்





யாழ்ப்பாணம் குருநகர் புனித யாகப்பர் ஆலயம் மீதான விமானத் தாக்குதலில் படுகொலை செய்யப்பட்டவர்களின் 32ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் நேற்று வியாழக்கிழமை நடைபெற்றன.

உதவிப் பங்குத்தந்தை அருட்பணி றொகான் அடிகளார் தலைமையில் ஆலயத்தில் காலைத் திருப்பலியின் நிறைவில் உணர்வுபூர்வமாக நினைவு கூரப்பட்டது.

அதன் போது உயிரிழத்தவர்களின் உறவினர்கள் உள்ளிட்டோர் சுடரேற்றி, மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

கடந்த 1993ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 13ஆம் திகதி காலை திருப்பலி வழிபாட்டுக்கு மக்கள் கூடியிருந்த வேளை, இலங்கை விமானப் படையின் "சுப்பர் சொனிக்" விமானங்கள் ஆலயத்தின் மீது குண்டு வீசியதில் ஆலயத்தில் வழிபாட்டில் ஈடுபட்டிருந்த 08 வயதுச் சிறுமி உள்ளிட்ட 13 பேர் படுகொலை செய்யப்பட்டிருந்ததுடன், 25க்கும் அதிகமானோர் படுகாயங்களுக்குள்ளாகி இருந்தனர்.

பழமை வாய்ந்த தேவாலயமும் பகுதியளவில் கடும் சேதங்களுக்குள்ளாகி இருந்தது. (ம-7,33)



இலங்கை பொறியியல்சேவை மற்றும் இணைந்த சேவையின் தொழில்நுட்பவியல் சேவை பதவிக்கான நியமனம் வழங்கல் நிகழ்வு கைதடியிலுள்ள பிரதம செயலாளர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை காலை (12) நடைபெற்றது.

4 பொறியியலாளர்கள், 39 தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டனர்.

# யாழ்.வந்தடைந்தார் தொல்.திருமாவளவன்



(யாழ்ப்பாணம்)

இந்தியப் பாராளுமன்ற உறுப்பினரும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவருமான முனைவர் தொல். திருமாவளவன் நேற்று வியாழக்கிழமை யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் ஊடாக யாழ்ப்பாணத்தை வந்தடைந்தார்.

வடமாகாண மரநடுகை மாதத்தை முன்னிட்டு தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் நடத்தவுள்ள "கார்த்திகை வாசம்" மலர்க் கண்காட்சியில் கலந்து கொள்வதற்காக யாழ்ப்பாணத்தை வந்தடைந்துள்ளார்.

குறித்த நிகழ்வானது நல்லூர் கிட்டுப் பூங்காவில் இன்று வெள்ளிக்கிழமை மாலை ஆரம்பமாகி தொடர்ந்து 23 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. (ம-7,33)

## காதலால் வந்த சோகம்

# தாய்லாந்து இரவு விடுதியில் இருந்து யாழ்.யுவதி மீட்பு

(கொழும்பு)

காதலனை நம்பி வெளிநாடு சென்ற யாழ்ப்பாணத்தின் தீவகப் பகுதியைச் சேர்ந்த 23 வயதான யுவதி ஒருவர், தாய்லாந்தில் உள்ள இரவு விடுதி ஒன்றிலிருந்து அந்நாட்டுப் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

மீட்கப்பட்ட யுவதி, தென் பகுதியைச் சேர்ந்த இளைஞன் ஒருவரைக் காதலித்து வந்த நிலையில், கடந்த ஆண்டு அவருடன் செல்வதாகக் கூறி வீட்டை விட்டுப் புறப்பட்டுச் சென்றுள்ளார்.

அதன் பின்னர் யுவதி பற்றிய தகவல்கள் எதுவும் உறவினர்களுக்குக் கிடைக்காத நிலையில், அவர் வெளிநாடு ஒன்றிற்குச் சென்றுள்ளதாக மட்டுமே அவர்கள் அறிந்திருந்தனர்.

நிலைமை இவ்வாறு இருக்க, கடந்த மாதம் அந்த யுவதி தனது உறவினர் ஒருவருடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு, கண்ணீருடன் தனது நிலைமையைத் தெரிவித்துள்ளார்.

உடனடியாகச் செயற்பட்ட யுவதியின் உறவினர்கள், இது தொடர்பாகப் பொலிஸில் முறைப்பாடு செய்தனர்.

இந்த முறைப்பாட்டிற்கு அமைவாக மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் மற்றும் நடவடிக்கைகளின் பலனாக குறித்த யுவதி தாய்லாந்தில் உள்ள ஒரு இரவு நேர விடுதியில் அந்நாட்டுப் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளார். (ம-7)

# 25 முதிரை மரக்குற்றிகள் வட்டுக்கோட்டையில் மீட்பு

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டைப் பகுதியிலுள்ள காணி ஒன்றிலிருந்து 25 முதிரை மரக்குற்றிகள் நேற்று மீட்கப்பட்டன. இதன் போது சந்தேகநபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

வட்டுக்கோட்டைப் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் அடிப்படையில் அனுமதிப்பத்திரம் இல்லாமல் இருந்த குறித்த மரக்குற்றிகள் மீட்கப்பட்டன.

மீட்கப்பட்ட மரக்குற்றிகளுடன் சந்தேகநபர் வட்டுக்கோட்டைப் பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

விசாரணைகளின் பின்னர் அவரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,104)

## நாட்டில்...

மக்கள் விடுதலை முன்னணியின் 36 வது கார்த்திகை வீரர்கள் நினைவேந்தல் நிகழ்வு, அக்கட்சியின் தலைவர் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தலைமையில் கொழும்பு விஹாரமஹாதேவி திறந்த வெளி அரங்க வளாகத்தில் நேற்று நடைபெற்றது.

அங்கு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது மேலும் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி, அண்மையில் நான் புலனாய்வு அதிகாரிகளுடன் கலந்துரையாடினேன். ஒரே வங்கிக் கணக்கில் முஸ்லிம் அடிப்படை வாதிகளுக்கும் சம்பளம் வழங்கப்பட்டுள்ளதுடன் சிங்கள அடிப்படைவாதிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

மக்களின் வரிப் பணத்திலேயே இது வழங்கப்பட்டுள்ளமை இன்று வெளியாகியுள்ளது.

சிங்கள அடிப்படைவாதிகளிடம் நீங்கள் முஸ்லிம் மக்களுக்கு எதிராகக் கூச்சலிடுங்கள் என்று இதோ பணம்.

மறுபக்கம் முஸ்லிம் அடிப்படைவாதிகளிடம் சிங்கள மக்களுக்கு எதிராகக் கூச்சலிடுங்கள் இதோ பணம்.

ஒரே அரசாங்கத்தின் கீழ் வரிப்பணத்தில் அவர்களுக்கு சம்பளம் வழங்கப்பட்டுள்ளது.

அவர்கள் நிலையாக இருப்பதற்காக இந்த இனவாதத்தைப் பயன்படுத்தினர்.

எனினும் இனி ஒருபோதும் எமது நாட்டில் இனவாதத்திற்கு இடமில்லை.

எமது அரசாங்கத்தை கவிழ்ப்பது என்பது இயலாத காரியம் என்றார். (ம-7,33)

## யாழில்...

உயர் மட்டக் கூட்டம் ஒன்று பாராளுமன்ற வளாகத்தில் நேற்று நடைபெற்றது.

இந்தக் கூட்டத்திற்கு கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகர், பாதுகாப்புப் பிரதி அமைச்சர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் அருண ஜய சேகர, மற்றும் துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து பிரதி அமைச்சர் ஜனித்த ருவன் கொடித்துவக்கு ஆகியோர் இணைந்து தலைமை தாங்கினர்.

தேசிய நல்லிணக்கச் செயற்பாட்டின் பிரதானமாகக் கருதப்படும் காணி தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான அரசாங்கத்தின் முயற்சிகளைத் துரிதப்படுத்தும் நோக்குடனேயே இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

எல்லை மறுசீரமைப்புகளை இறுதி செய்தல், இழப்பீட்டு செயல்முறையை விரைவுபடுத்துதல், விடுவிப்பதற்கான காணித் திட்டங்களுக்கு முன்னுரிமை அளித்தல் மற்றும் நிர்வாக இடையூறுகளைத் தகர்த்தல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட்டதாகப் பாதுகாப்பு அமைச்சு வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர்கள், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், முப்படைத் தளபதிகள், பொலிஸ் மா அதிபர் மற்றும் பாதுகாப்பு மற்றும் நிர்வாகத் துறைகளைச் சேர்ந்த பிற சிரேஷ்ட அதிகாரிகளும் இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்றனர். (ம-7)

# 'தமிழர் கலைகள் - மரபும் மாற்றமும்' பன்னாட்டு ஆய்வு மாநாடு இன்று

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் சேர்.பொன்னம்பலம் இராமநாதன் காண்பிய ஆற்றுகைக் கலைகள் பீடம் "தமிழர் கலைகள் - மரபும் மாற்றமும்" என்னும் தொனிப் பொருளில் ஏற்பாடு செய்துள்ள இரண்டாவது பன்னாட்டு ஆய்வு மாநாடு - இன்று காலை 8.00 மணிமுதல் யாழ்ப்பாணம் திருவள்ளுவர் பண்பாட்டு மையத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறீசற்குணராஜா பொதுத் தலைமையின் கீழ் பீடத் தலைவர் த.றொபேட் அருட்சேகரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த மாநாட்டில், இந்தியத் துணைத் தூதுவர் திரு.ஸ்ரீசாய் முரளி அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

மாநாட்டிற்கான முதன்மைக் கருத்துரையை, இந்தியாவின் கலாஷேத்ரா நிறுவனத்தின் ஓய்வுநிலை உதவிப் பேராசிரியர் முனைவர் சே.ரகுராமன் அவர்கள் வழங்கவுள்ளார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாதத் தடைச் சட்டத்தை ரத்து செய்யும் பரிந்துரை கையளிப்பு

**(கொழும்பு)**

**பயங்கரவாதத் தடைச்சட்டத்தை ரத்து செய்வது தொடர்பான பரிந்துரை அறிக்கை நீதி அமைச்சரிடம் கையளிக்கப்பட்டுள்ளது. அது தொடர்பில் ஆராயும் குழுவின் தலைவர் ரியன்சி அர்சகுலரத்ன குறித்த அறிக்கையை நீதி அமைச்சர் ஹர்சன நாணயக்காரவிடம் கையளித்துள்ளார்.**

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை இரத்து செய்வது குறித்து ஆய்வு செய்து பொருத்தமான சட்ட நடவடிக்கைகளை முன்மொழிவதற்காக இந்தக் குழு நிறுவப்பட்டதாக நீதி மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சு ஏப்ரல் 13 அன்று அறிவித்தது.

பரந்த மற்றும் அனைத்தையும் உள்ளடக்கிய சீர்திருத்த செயல்முறையை உறுதி செய்வதற்காக சிவில் சமூக அமைப்புகளிடமிருந்து உள்ளீடுகளையும் சர்வதேச நிறுவனங்கள் மற்றும் சமூகங்களிடமிருந்து கருத்துக்களையும் பெறுவதும் இந்தக் குழுவிற்குப் பணிக்கப்பட்டது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இரத்து செய்வது தொடர்பான முதற்கட்ட விவாதம் ஏப்ரல் 11 அன்று நீதி மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தலைமையில் அமைச்சின் வளாகத்தில் நடைபெற்றது.

கலந்துரையாடலின் போது பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை இரத்து செய்வது தற்போதைய அரசாங்கத்தின் கொள்கை முன்னுரிமை என்று அமைச்சர் நாணயக்கார மீண்டும் வலியுறுத்தினார்.

அறிமுகப்படுத்தப்படும் எந்தவொரு புதிய சட்டமும், சர்வதேச தரநிலைகளுக்கு ஏற்ப, அரசியலமைப்பு ரீதியாக உத்தரவாதம் அளிக்கப்பட்ட மனித உரிமைகள் மற்றும் கருத்துச் சுதந்திரங்களை நிலைநிறுத்தும் அதேவேளையில், சமகால உலகளாவிய பயங்கரவாத சவால்களை எதிர்கொள்ளும் திறன் கொண்டதாக இருக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

கடந்த கால அரசாங்கங்கள் இந்த சட்ட சீர்திருத்தங்களைக் கொண்டுவருவதில் உரிய விடா முயற்சியுடன் செயற்படவில்லை என்றும் நியமிக்கப்பட்ட குழு குறுகிய காலத்திற்குள் சட்டத்தை ரத்து செய்வதற்கான தொடர்புடைய விடயங்களை உறுதியாக அடையாளம் காணுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றும் நீதி அமைச்சு மேலும் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

# கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கு எவ்வித திட்டமும் இல்லை

## திலித் ஜயவீர



(கொழும்பு)

2028 ஆம் ஆண்டுக்கு பின்னர் கடனை திருப்பி செலுத்துவதற்கு எவ்வித திட்டங்களும் முன்வைக்கப்படவில்லை. ஆகவே அரசாங்கம் தோல்வியடைந்துள்ளது என்றே குறிப்பிட வேண்டும் என சர்வஜன சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் திலித் ஜயவீர தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் அவர் மேலும் உரையாற்றுகையில், 2026 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் நாட்டு மக்களுக்கு பயனுடையதாக அமையும் என்று ஜனாதிபதி குறிப்பிடுகிறார்.

சமூக கட்டமைப்பில் ஏழ்மை 3 சதவீதமாகவும் தொழிலின்மை 2 சதவீதத்தாலும் உயர்வடைந்துள்ளது. ஆனால் நடுத்தர மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்வடையவில்லை. சம்பளமும் அதிகரிக்கப்படவில்லை.

வரி வருமானத்தின் ஊடாக ஒரு ரில்லியன் ரூபாவை திரட்டியுள்ளதாக ஜனாதிபதி குறிப்பிடுகிறார். இளைஞர்களின் வாகனம் மற்றும் வீடு உட்பட அழகான வாழ்க்கையின் கனவு தான் வரியாக திரட்டப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியம் விதிக்கும் சகல நிபந்தனைகளையும் அரசாங்கம் ஏற்றுக் கொள்கிறது. மேற்குலக நாடுகள் மத்தியில் அரசாங்கம் தலைகுனிந்து செயற்படுகிறது.

இதனால் இலங்கை தனது தேசிய கௌரவத்தை இழந்துள்ளது. சர்வதேச நாணய நிதியத்தின் திட்டங்களை செயற்படுத்துவதாக குறிப்பிட்டுக் கொண்டு அரசாங்கம் நாட்டை பொருளாதார ரீதியில் மென்மேலும் நெருக்கடிக்குள்ளாக்குகிறது என தெரிவித்துள்ளார். (நி)

# வயிற்றுப் பகுதி ஒட்டிய நிலையில் பிறந்த இரட்டையர்கள்

(கொழும்பு)

காசல் வீதி மகளிர் மருத்துவமனையில் இரட்டைக் குழந்தைகள் (உடலால் ஒட்டிய இரட்டையர்கள்) பிறந்துள்ளதாக மருத்துவமனை பணிப்பாளர் வைத்தியர் அஜித் தன்தநாராயன குறிப்பிட்டார்.

இந்தக் குழந்தைகள் கடந்த 10 ஆம் திகதி பிறந்துள்ளன.

ஒரு குழந்தையின் எடை 2 கிலோ 200 கிராம் எனவும், மொத்தமாக இரண்டு குழந்தைகளும் 4 கிலோ 400 கிராம் எடையுடன் ஆரோக்கியமாகப் பிறந்துள்ளதாக மருத்துவமனை பணிப்பாளர் குறிப்பிட்டார்.

வயிற்றுப் பகுதியால் ஒன்றிணைந்துள்ள இந்தக் குழந்தைகளைப் பிரிக்கும் சத்திர சிகிச்சை மூன்று மாதங்களுக்குப் பிறகு சிறுவர் சீமாட்டி மருத்துவமனையில் நடைபெறவுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.


காசல் மருத்துவமனையில் இரட்டைக் குழந்தைகளின் பிறப்புகள் இதற்கு முன்பு நிகழ்ந்துள்ள போதிலும் அண்மைக் காலத்தில் இவ்வாறானதொரு குழந்தை பிறப்பு இடம் பெற்றது இதுவே முதல் சந்தர்ப்பம் என மருத்துவமனை பணிப்பாளர் தெரிவித்தார். (நி)

# அநுர அரசின் பயணம் சிறப்பு பொன்சேகா புகழாரம்

(கொழும்பு)

இலங்கையில் கடந்த கால அரசுகள் பயணித்ததைவிட தற்போதைய அரசின் பயணம் சிறப்பாக உள்ளது என முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,



தேசிய மக்கள் சக்தி அரசு, ஊழல்வாதிகள் மற்றும் மோசடியாளர்களுக்கு இடமளிக்கவில்லை என்பதை நாம் ஏற்றாக வேண்டும்.

அதேபோல ஊழல் வலையமைப்பை முற்றாக இல்லாதொழிப்பதற்கு இன்னும்நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதையும் குறிப்பிட்டாக வேண்டும். ஆனால் அதற்குரிய முயற்சி இந்த அரசால் எடுக்கப்படுவதை மதிக்கின்றோம் வரவேற்கின்றோம்.

ரணில் விக்கிரமசிங்க தான் என்னை அரசியலுக்குக் கொண்டு வந்தார். அவரைச் சிறையில் அடைத்தபோது கவலை அடைந்தேன். எனினும் இதன்மூலம் இந்த அரசு சிறந்த முன்னுதாரணத்தை வழங்கியது.

நாட்டில் அனைவருக்கும் ஒரே கரண்டியில் தான் பகிரப்படுகின்றது என்பதே இதன் மூலம் வழங்கப்பட்ட செய்தியாகும். இதனை நாம் மதிக்க வேண்டும் எனத் தெரிவித்தார். (நி)

# தொலைபேசி பயன்பாட்டால் அதிகரிக்கும் நீரிழிவு நோய்

## ஆய்வில் திடுக்கிடும் தகவல்

(கொழும்பு)

தொலைக்காட்சி மற்றும் தொலைபேசி பயன்பாட்டால் இளம் பருவத்தினரிடையே நீரிழிவு நோய் அதிகரித்து வருவதாக அண்மைய ஆய்வொன்றில் தெரியவந்துள்ளது.

வெளி விளையாட்டு, நடைப்பயிற்சி இல்லாமல் இருப்பது இந்த நிலைமையை மேலும் அதிகரிப்பதாக அமைகிறது.

மதுரை அரச மருத்துவமனை நிபுணர்கள் நடத்திய ஆய்வில் இந்த திடுக்கிடும் உண்மைகள் வெளியாகியுள்ளதாகத் தமிழக ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

கொரோனா தொற்றுக்குப் பிறகு நீரிழிவு நோய் பாதிப்பு கடந்த பத்தாண்டுகளுக்கு முன்பு இருந்ததை விட அதிகரித்துள்ளதாக அந்த ஆய்வில் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி)

# ஒவ்வொரு வருடமும் பதிவாகும் 250,000 தெருநாய்கடி சம்பவங்கள்

## இலங்கை விலங்குகள் நலச்சங்கம் எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் தெரு நாய்களின் எண்ணிக்கை அபாயகரமாக உயர்வடைந்துள்ளதாக இலங்கை விலங்குகள் நலச்சங்கம் எச்சரித்துள்ளது.

இதன்படி தெரு நாய்களின் எண்ணிக்கை இரண்டு மில்லியன் முதல் மூன்று மில்லியன் வரை அதிகரித்துள்ளதாக அந்தச் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

இந்த அபரிமிதமான அதிகரிப்பால், ஒவ்வொரு வருடமும் சுமார் 250,000 தெரு நாய்க் கடி சம்பவங்கள் பதிவாவதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கண்டியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துரைக்கும் போது, விலங்கு நலன் மூலம் சமூகப் பாதுகாப்பிற்கான கண்டிச் சங்கத்தின் செயலாளர் சம்பா பெர்னாண்டோ இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் பெண் நாய்கள் ஆண்டுக்கு இரண்டு முறை குட்டி ஈனுவதால் தற்போது இலங்கையில் ஒவ்வொரு எட்டு மனிதர்களுக்கும் ஒரு தெரு நாய் என்ற சதவீதத்தில் அதன் எண்ணிக்கை உயர்ந்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# அடேங்கப்பா இது நம்ம லிஸ்ட்லயே இல்லையே ராஜஸ்தான் ராயல்ஸ் கப்டனாக மாறும் ஜடேஜா


19 ஆவது ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டிக்கான வீரர்களின் ஏலத்தை அடுத்த மாதம் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கு முன்னர் 10 அணிகளும் தாங்கள் தக்கவைக்கும் மற்றும் விடுவிக்கும் வீரர்களின் பட்டியலை வெளியிட வேண்டும். இதையொட்டி தற்போது வீரர்கள் பரஸ்பர வர்த்தக பரிமாற்றம் தொடங்கியுள்ளது.

கடந்த ஆண்டு கடைசி இடத்துக்கு தள்ளப்பட்டதால் இந்த முறை அணியை வலுப்படுத்த சென்னை சூப்பர் கிங்ஸ் தீவிரமாகியுள்ளது. இதன் ஒரு பகுதியாக சென்னை அணி நிர்வாகம், ராஜஸ்தான் ராயல்ஸ் அணியின் கப்டனும், விக்கெட் கீப்பருமான சஞ்சு சாம்சனை தங்கள் பக்கம் இழுக்க பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது.

அவருக்கு பதிலாக ரவீந்திர ஜடேஜா, சாம் கர்ரன் ஆகியோரை தரும்படி ராஜஸ்தான் அணி கேட்டுள்ளது. சிஎஸ்கே அணியும் இதற்கு சம்மதம் தெரிவித்துள்ளதாக தகவல்கள் கூறுகின்றன. இதற்கான அதிகாரபூர்வ அறிவிப்பு வெளியாகும் என தகவல்கள் வெளியாகி உள்ளது.

இந்நிலையில், ராஜஸ்தான் ராயல்ஸ் அணியின் கப்டனாக ரவீந்திர ஜடேஜா நியமனம் செய்ய வாய்ப்புள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. ஜடேஜா, ராஜஸ்தான் ராயல்ஸ் அணி நிர்வாகத்திடம் கப்டன் பதவியை கேட்டுள்ளதாக கூறப்படுகிறது.





ராஜஸ்தான் ராயல்ஸ் அணியில் தான் தனது ஐபிஎல் கிரிக்கெட் வாழ்க்கையை ஜடேஜா தொடங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது. (நி)

# குண்டு வெடிப்பின் எதிரொலி; பிற்போடப்பட்ட போட்டிகள்



இலங்கை மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான ஒரு நாள் சர்வதேச கிரிக்கெட் தொடரின் எஞ்சிய போட்டிகள் பிற்போடப்பட்டுள்ளன என பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத் தலைவர் மொஹ்சின் நக்வி தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானின் தலைநகர் இஸ்லாமாபாத்தில் நீதிமன்றக் கட்டடம் ஒன்றுக்கு முன்பாக நடந்த குண்டு வெடிப்பில் குறைந்தபட்சம் 12 பேர் உயிரிழந்ததுடன் சுமார் 21 பேர் காயமடைந்துள்ளனர்.

இந்தத் தாக்குதலுக்கு தெஹ்ரீக்-இ-தலிபான் பாகிஸ்தான் (டிடிபி) அமைப்பை பாகிஸ்தான் நேரடியாகக் குற்றம் சாட்டியுள்ளது.

இந்நிலையில், பாகிஸ்தானில் இடம்பெற்ற பயங்கரவாத தற்கொலை குண்டுத் தாக்குதலை அடுத்து அங்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை குழாமின் பெரும்பாலான வீரர்கள் மற்றும் பணிக்குழாமினர் நாடு திரும்புவதற்கு கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதனை அடுத்து குறித்த விடயம் தொடர்பாக, இலங்கை கிரிக்கெட் நிர்வாகமும் பாகிஸ்தான் கிரிக்கெட் சபையும் நீண்ட கலந்துரையாடலை நடத்தியிருந்தது.

அதன் பின்னர் இலங்கை அணி வீரர்கள் மற்றும் பணிக்குழாமின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு பாகிஸ்தான் கிரிக்கெட் சபை நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி குறித்த இரண்டு அணிகளுக்கும் இடையே நேற்று இடம்பெறவிருந்த இரண்டாவது ஒருநாள் சர்வதேச போட்டி இன்றும் நாளையும் இடம்பெறவிருந்த 3 வதும் இறுதியுமான ஒருநாள் போட்டி எதிர்வரும் 16 ஆம் திகதி நடைபெறும் என பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத் தலைவர் மொஹ்சின் நக்வி தெரிவித்துள்ளார். (நி)

# வரலாறு படைத்த இலங்கையின் இளம் மேசைப்பந்து நட்சத்திரம்



இலங்கையின் வளர்ந்து வரும் மேசைப்பந்தாட்ட நட்சத்திரமான தாவி சமரவீர உலக மேசைப்பந்தாட்ட வரலாற்றில் தனது பெயரைப் பொறித்துள்ளார்.

அண்மையில் வெளியிடப்பட்ட 11 வயதுக்குட்பட்டோருக்கான ஆண்கள் உலக மேசைப்பந்தாட்ட தர வரிசையில் அவர் 3ஆம் இடத்தைப் பிடித்து, எந்தவொரு வயதுப் பிரிவிலும் இலங்கை மேசைபந்தாட்ட வீரர் ஒருவரால் அடையப்படாத உயர்ந்த பட்ச தரவரிசை என்ற சாதனையை நிகழ்த்தியுள்ளார்.

சர்வதேச மேசைப்பந்தாட்ட சம்மேளனம் இந்த வாரம் வெளியிட்ட புதிய தரவரிசைப் பட்டியலில், தாவி சமரவீர அபாரமான முன்னேற்றத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

அவர் 52 இடங்கள் முன்னேறி, 200 தரவரிசைப் புள்ளிகளுடன் மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ளார்.

தற்போது, உகாண்டாவின் ஜோசப் செபாடிண்டிரா மற்றும் கட்டாரின் ரபியா அல்-குவாரி ஆகியோர் மட்டுமே தாவி சமரவீரவுக்கு முன்னால் தரவரிசையில் உள்ளனர்.

தாவி சமரவீரவின் இந்தச் சாதனை, இலங்கை விளையாட்டுத் துறைக்கு, குறிப்பாக மேசைப்பந்தாட்டத்திற்குப் பெரும் பெருமையைத் தேடித்தந்துள்ளது. (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைப்பொருளுடன் மாலைதீவில் கைதான இலங்கை மீனவர்கள்

## 30 நாட்கள் தடுப்புக் காவலில்

(கொழும்பு)

மாலைதீவு கடற்பரப்பில் வைத்து மாலைதீவு பாதுகாப்பு பிரிவினரால் 355 கிலோக்கிராம் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்ட இலங்கையைச் சேர்ந்த 5 மீனவர்களை 30 நாட்கள் தடுப்புக்காவல் உத்தரவின் பேரில் தடுத்து வைத்து விசாரணைக்கு உட்படுத்த அந்நாட்டு பாதுகாப்பு பிரிவு தீர்மானித்துள்ளது.

மாலைதீவு கடற்பரப்பில் பயணித்துக் கொண்டிருந்த சந்தேகத்திற்கிடமான இலங்கையைச் சேர்ந்த மீன்பிடி படகொன்று மாலைதீவு பாதுகாப்பு பிரிவினரால் கடந்த 7 ஆம் திகதி போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டிருந்தது. இதன்போது படகில் பயணித்த 5 மீனவர்களும் கைதாகியிருந்தனர்.

கடற்படையினரால் மாலைதீவு பாதுகாப்பு பிரிவினருக்கு தெரியப்படுத்தப்பட்ட நிலையில் போதைப்பொருளுடன் பயணித்துக் கொண்டிருந்த "அவிஷ்க புதா" என்னும் இலங்கையைச் சேர்ந்த மீன்பிடி படகை அந்நாட்டு பாதுகாப்பு பிரிவினர் கைது செய்திருந்தனர்.

மீன்பிடி படகில் இருந்து மீட்கப்பட்ட 24 பொதிகளில் இருந்து 58 கிலோ 600 கிராம் ஹெரோயின் மற்றும்.297 கிலோ 300 கிராம் ஐஸ் போதைப்பொருள் பறிமுதல் செய்யப்பட்டதாக மாலைதீவு பாதுகாப்பு பிரிவு உறுதிப்படுத்தியிருந்தது.

இலங்கையைச் சேர்ந்த 28, 34, 39, 42 மற்றும் 63 வயதுடைய ஐந்து மீனவர்களே சம்பவம் தொடர்பில் கைதாகியிருந்தனர். இந்நிலையில் மீனவர்களை 30 நாட்கள் தடுப்புக்காவல் உத்தரவின் பேரில் தடுத்து வைத்து விசாரணை செய்ய அந்நாட்டு பாதுகாப்பு பிரிவு தீர்மானித்துள்ளது.

சந்தேகநபர்கள் தொடர்பில் விசாரணை செய்வதற்காகவும் அவர்களை அழைத்து வருவதற்காகவும் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பணியக அதிகாரிகள் மற்றும் கடற்படை அதிகாரிகள் அடங்கிய குழுவொன்று மாலைதீவுக்கு பயணமாகியிருந்தது. மாலைதீவு பாதுகாப்பு பிரிவினரால் முன்னெடுக்கப்பட்டு வரும் விசாரணை காரணமாக சந்தேகநபர்களை அழைத்துவர முடியாமல் போயுள்ளதுடன் மாலைதீவுக்குச் சென்றிருந்த அதிகாரிகள் குழுவும் மீள நாடு திரும்ப உள்ளது என கடற்படை ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ஙி)

# கடல் வழியாக தமிழகத்திற்குள் நுழைந்த குடும்பஸ்தர் கைது

(மன்னார்)

சட்ட விரோதமான முறையில் மன்னாரில் இருந்து படகு மூலம் தனுஷ்கோடி அரிச்சல் முனைப் பகுதியை சென்றடைந்த குடும்பஸ்தர் ஒருவர் நேற்று வியாழக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

தனுஷ்கோடி அரிச்சல்முனை கடற்கரை பகுதியில் நேற்றைய தினம் மரைன் பொலிஸார் ரோந்து பணியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போது கடற்கரையில் சந்தேகத்திற்கு இடமாக நின்று கொண்டிருந்த நபரை பிடித்து விசாரித்தனர்.

அப்போது அவர் சட்ட விரோதமான முறையில் கடல் வழியாக இலங்கையிலிருந்து தப்பி தனுஷ்கோடிக்கு வந்து இறங்கியமை தெரிய வந்துள்ளது. அதனை அடுத்து அவரை கைது செய்த பொலிஸார் அவரிடம் நடத்திய விசாரணையில் அவர் இலங்கை மன்னார் வங்காலைப் பகுதியைச் சேர்ந்த சூசை தாசன் (வயது-56) என்பது தெரிய வந்தது.

இதையடுத்து சட்ட விரோதமான முறையில் கடல் வழியாக தமிழகத்திற்குள் சென்றதன் காரணம் குறித்து மரைன் பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (8-285)

# 36 ஆவது கார்த்திகை வீரர்கள் தினம் வவுனியாவில் அனுஷ்டிப்பு



(வவுனியா)

மக்கள் விடுதலை முன்னணியின் ஏற்பாட்டில் 36 ஆவது கார்த்திகை வீரர்கள் தினம் நேற்று வவுனியாவில் அனுஷ்டிக்கப்பட்டது.

வவுனியாவில் உள்ள தனியார் மண்டபம் ஒன்றில் பிரதியமைச்சர் உபாலி சமரசிங்க தலைமையில் இடம்பெற்ற குறித்த அஞ்சலி நிகழ்வில் மக்கள் விடுதலை முன்னணியின் உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் என பலரும் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தி இருந்தனர்.

இதன் போது அஞ்சலி தீபம் ஏற்றப்பட்டதோடு மலரஞ்சலியும் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (8-250)


Airport & Aviation Services (Sri Lanka)(Private) Limited

## வரையறுக்கப்பட்ட விமான நிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி

## வீடுகள் / கட்டிடங்களை வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்காக

வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின் யாழ்ப்பாணம் சர்வதேச விமானநிலையத்தின் பதவியணியினருக்காக வதிவிட வசதிகளை வழங்குவதற்கு வாடகை அடிப்படையில் பொருத்தமான வீடுகள் / கட்டிடங்களைப் பெற்றுக்கொள்வதற்காக கம்பனியின் மூலம் முன்மொழிவுகள் அழைக்கப்படுகின்றன.

உரிய வீடுகள் / கட்டிடங்கள் மிகவும் சிறந்த நிலையில் இருப்பது அவசியம் என்பதுடன் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு தேவைப்பாடுகள் நிறைவு செய்திருத்தல் வேண்டும்.

01. யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்திற்கு அண்மையில் மற்றும் யாழ்ப்பாணம் விமான நிலையத்திற்கு எளிதாக அணுக முடியுமாக இருக்க வேண்டும். பலாலி / காங்கேசன்துறை மற்றும் யாழ்ப்பாணம் போன்ற பகுதிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
02. வரவேற்பறை /உணவறை / படுக்கையறைகள் (குளிரூட்டப்பட்ட அறைகளுடன்) இணைக்கப்பட்டுள்ள குளியலறை அல்லது பொதுவான குளியலறைகள் மற்றும் சமையலறை
03. அனைத்து விதமான வீட்டுத் தளபாடங்களுடன் இருத்தல் வேண்டும். (தளபாடங்கள், வீட்டுப் பொருட்கள், மின்சாதனங்கள், சமையலறைப் பாத்திரங்கள் போன்றவை)
04. போதுமானளவு வாகனங்களை நிறுத்தும் வசதிகள்
05. தொடர்வாரியான நீர் / மின்சார விநியோகம்
06. அனைத்து பராமரிப்பு பணிகளையும் வீட்டு உரிமையாளரே செய்ய வேண்டும்.
07. வீட்டிற்கு வெளியே சுத்தம் செய்யும் பணியை வீட்டு உரிமையாளர் செய்ய வேண்டியதுடன் குப்பைகளை அகற்றுவதற்கு பொருத்தமான அணுகுமுறையை ஏற்பாடு செய்து தொடர்ந்தும் பேணப்பட வேண்டும்.

வீடுகள் / கட்டிடங்கள் முதலாவதாக 06 மாத காலத்துக்காக வாடகை அடிப்படையில் எழுத்து மூலமான ஒப்பந்தமொன்றின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்டு பின்னர் கம்பனியின் தேவைப்பாட்டின் அடிப்படையில் இரு தரப்பினரினதும் இணக்கப்பாட்டுடன் எழுத்து மூலமான ஒப்பந்தமொன்றின் மூலம் அக்காலத்தினை நீடித்துக் கொள்ள முடியும்.

கீழே தரப்பட்டுள்ள காரணங்கள் முன்மொழிவில் உள்ளடங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**வீடுகள் / கட்டிடங்கள் தொடர்பான முழு விபரம்**

| | | | |
|---|---|---|---|
| 1) | பெயர் (வீட்டின் / கட்டிடத்தின் உரிமையாளர்) | 9) | படுக்கையறைகளின் எண்ணிக்கை (குளிரூட்டம் செய்யப்பட்ட) |
| 2) | வீட்டு / கட்டிடத்தின் முகவரி | 10) | குளியலறைகள்/ கழிப்பறைகளின் எண்ணிக்கை . (பொதுவான/ இணைக்கப்பட்ட) |
| 3) | உரிமையாளரின் தொலைபேசி இலக்கம் | 11) | வரவேற்பறை (உண்டு /இல்லை) |
| 4) | பிரதேச செயலகப் பிரிவு | 12) | சாப்பாட்டு அறை (உண்டு / இல்லை) |
| 5) | கிராமசேவகர் பிரிவு | 13) | சமையலறை (உண்டு / இல்லை) |
| 6) | யாழ்ப்பாணம் விமான நிலையத்திற்குள்ள தூரம் (கி.மீ) | 14) | வாகன நிறுத்துமிட வசதிகள் (உண்டு /இல்லை) |
| 7) | மாடிகளின் எண்ணிக்கை | 15) | அனைத்துவித வீட்டுத்தளபாடங்கள் (உண்டு/இல்லை) |
| 8) | வீட்டின் பரப்பளவு (சதுரடி) | 16) | வேறு ஏதேனும் தொடர்புடைய விவரங்கள். |

02. வீட்டின் / கட்டிடத்தின் உரிமையாளரின் தேசிய அடையாள அட்டையின் பிரதி.
03. வீட்டின் / கட்டிடத்தின் உரிமையாளரின் காணியுறுதியின் பிரதி
04. வீட்டின் / கட்டிடத்தின் புகைப்படங்கள்.
05. எதிர்பார்க்கப்படும் மாத வாடகை
06. எதிர்பார்க்கப்படும் மாதாந்திர வாடகை. (வீடு / கட்டிடத்தின் உரிமையாளருடன் கலந்துரையாடி முடிவு செய்யும் உரிமையை நிறுவனம் கொண்டுள்ளது)
07. எதிர்பார்க்கப்படும் முற்பணம் (வீடு / கட்டிடத்தின் உரிமையாளருடன் கலந்துரையாடி முடிவு செய்யும் உரிமையை நிறுவனம் கொண்டுள்ளது)

முறையாக பூர்த்தி செய்யப்பட்ட முன்மொழிவுத் தாள் முத்திரை குறியிடப்பட்ட உறை ஒன்றில் இட்டு இடதுபக்க மேல் மூலையில் வீடுகள் / கட்டிடங்களை பெறுவதற்கான முன்மொழிவுகள் என குறிப்பிட்டு "தவிசாளர், திணைக்கள பெறுகை குழு இலக்கம் 03, வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவு, வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி கட்டுநாயக்க" விற்கு **2025 நவம்பர் மாதம் 27 ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு** முன்னர் கிடைக்கக்கூடியவாறு அனுப்புதல் வேண்டும்.

மேலதிக தகவல்களைப் பெறுவதற்காக 011-226 3550 / 011-226 3513 என்ற தொலைபேசி இலக்கங்களை அழைக்கவும்

**தவிசாளர்,**
**வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், கட்டுநாயக்க.**

(C-330)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சியில் சுற்றி வளைக்கப்பட்டது வீடு பெருந்தொகை கேரளா கஞ்சா மீட்பு



(தருமபுரம்)

கிளிநொச்சி - பிரமந்த னாறு கல்லாறு பகுதியில் உள்ள வீடொன்றின் பின் பகுதியில் இருந்து 26 கிலோ 800 கிராம் கேரளா கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

இச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

புலனாய்வு துறையின ருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் கல்லாறு பகுதி முழுவதும் விசேட சுற்றி வளைப்பு மற்றும் தேடுதல் நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டது.

இதன்போதே குறித்த கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

இச் சுற்றிவளைப்பின் போது சந்தேக நபர்கள் தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இச் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை தர்மபுரம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (8-316)

# இலவச நீரிழிவு பரிசோதனை முகாம்

(யாழ்ப்பாணம்)

உலக நீரிழிவு தினத்தை முன்னிட்டு யாழ். நீரிழிவு கழகமும் YMCA நிறுவனமும் இணைந்து நடத்தும் இலவச நீரிழிவு பரிசோதனை முகாம் நாளை சனிக்கிழமை காலை 9. மணி முதல் மதியம் 1 மணி வரை கச்சேரிக்கு அருகாமையில் உள்ள YMCA மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் நீரிழிவு பரிசோதனை, இரத்த அழுத்தம், உடல் திணிவுச் சுட்டி போன்ற பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வைத்திய ஆலோசனைகளும் வழங்கப்படும்.

அத்துடன் வாசிப்புக் கண்ணாடியும் இலவசமாக வழங்கப்படும்.

எனவே அனைவரும் கலந்து பயன்பெறுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (8)

# நாதஸ்வர வித்துவான் பாலமுருகனுக்கு அமெரிக்க அரசின் விருதுகள்



உலகப் புகழ் பெற்ற நாதஸ்வர வித்துவான் யாழ்ப்பாணம் பி.எஸ்.பாலமுருகனுக்கு கடந்த 1 ஆம் திகதி அமெரிக்க அரசின் இரண்டு உயரிய விருதுகள் வழங்கப்பட்டுள்ளன. (நி-8-33)

# பகவதி பகவானின் நன்றிகள் தின விழா

(யாழ்ப்பாணம்)

பகவத் தர்மத்தில் கார்த்திகை மாதம் நன்றி மாதமாக கொண்டாடுகின்றோம்.

இந்த மாதத்தில் நமது வாழ்வில் பிரமாண்டமான எண்ணிலடங்காத அற்புதங்களை செய்து எம்மை ஆட்கொண்டு எல்லா நேரத்திலும். துணை இருந்து ஆரோக்கியம் ஐஸ்வரியம் தந்து இகத்தில் ஆனந்தமாக வாழ வழி செய்து பரத்தில் ஜீவன் முத்தியை அடைய உதவி செய்து உலகத்தில் பெரியளவிலான மாற்றத்தை ஏற்படுத்த உதவி செய்யும் பரஞ்சோதி பகவதி பகவானுக்கு நன்றியைத் தெரிவிக்கும் விதமாக விசேட பாதுகை அபிசேகம் மற்றும் பஜனை,அற்புதங்கள் பகிர்தல் ஆகிய நிகழ்வுகள் இன்று வெள்ளிக்கிழமை 3 மணி முதல் 5 மணிவரை 815, கே.கே.எஸ். வீதி, சிவலிங்க புளியடி, யாழ்ப்பாணத்திலும் 116/ 1A, முகந்தாரம் , ஐயனார் வீதி, சுன்னாகத்திலும் இடம்பெறும். மேலதிக தொடர்புகளுக்கு

077 364 7436, 076 369 7508, 076 217 7697. (நி-8)

# உள்ளூராட்சி மன்றங்களின் செயற்பாடுகள் திருப்திகரமாக இல்லை

## ஆளுநர் சுட்டிக்காட்டு

**(யாழ்ப்பாணம்) ............................... உள்ளூராட்சி மன்றங்கள் சேவைகளை வழங்குவதற்கும் மேலாக தங்களது வருமானங்களையும் அதிகரிக்க வேண்டும். அதற்குத் தேவையான திட்டங்களை உருவாக்கி, உள்ளூர் கடன்கள் அபிவிருத்தி நிதியத்தையும் முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.**



உள்ளூர் கடன்கள் அபிவிருத்தி நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்பாக வடக்கு மாகாணத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களின் தவிசாளர்கள் மற்றும் செயலாளர்களுக்கான விழிப்புணர்வு செயலமர்வு கிளிநொச்சியில் அமைந்துள்ள முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி அலகில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில், வடக்கு மாகாணத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்கள் தங்கள் பிரதேசங்க ளுக்கு முதலீட்டாளர்களை ஈர்க்க வேண்டியது அவ சியம். முதலீட்டாளர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி வழங்க வேண்டும். அதே போன்று ஏற்கனவே முதலீடு செய்தவர்கள் "அவர்கள் எங்களுக்கு வரி செலுத்துகின்றனர்" என்ற அடிப்படையில், அவர்களின் தேவைகளையும் பூர்த்தி செய்ய வேண்டும். ஆனால் இந்த விடயங்களில் சில உள்ளூராட்சி மன்றங்களின் செயற்பாடுகள் திருப்திகரமாக இல்லை எனவும் எதிர் காலத்தில் உள்ளூராட்சி மன்றங்கள் தங்களது சொந்த வருமானத்தின் அடிப் படையிலேயே சபைகளை நிர்வகிக்க வேண்டிய நிலை ஏற்படும் என்பதையும், அதற்குத் தயாராக தற்போது முதலீடுகளை ஊக்குவிக்க வேண்டும் என்பதையும் வலியுறுத்தினார்.

அத்துடன் உள்ளூர் கடன்கள் அபிவிருத்தி நிதியத்தை மட்டுமல்லாது, வங்கிக் கடன்கள் மற்றும் ஜனாதிபதி நிதியத்தின் உதவிகளைப் பற்றிய விழிப்புணர்வு வடக்கு மாகாணத்தில் குறைவாக உள்ளது. இதேநேரத்தில் தென்பகுதியிலிருந்து அதிகளவில் விண்ணப்பங்கள் பெறப்படுகின்றன. இதற்குக் காரணம் மக்களிடையிலும், எங்களது களநிலை அலுவலர்களிடையிலும் தேவையான விழிப்புணர்வு இல்லாமையாகும்."

இதை மாற்றும் நோக்கத்துடன், வடக்கு மாகாணத்தில் உள்ளூர் கடன்கள் அபிவிருத்தி நிதியின் செயற்பாடுகளை விரிவாக்கும் வகையில் இவ்விழிப்புணர்வு செயலமர்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும், எதிர் காலத்தில் உள்ளூராட்சிமன்றங்கள் தங்களது நிலைத்தாபன அபிவிருத்தித் திட்டங்களுக்குத் தேவையான கடன்களை இந்த நிதியத்திலிருந்து பெற்றுக்கொள்வார்கள் என நம்புவதாகத் தெரிவித்தார். (8)

# சபரீச ஐயப்பனின் மகோற்சவப் பெருவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கோண்டாவில் ஈழத்து சபரிமலை சபரீச ஐயப்ப தேவஸ்தானத்தின் வருடாந்த மகரஜோதி மண்டல விரத மஹோற்சவப் பெருவிழா எதிர்வரும் 17.11.2025 தொடக்கம் 15.01.2026 வரை நடைபெறவுள்ளது.

எனவே அனைத்து சுவாமிமார்கள், குருசாமிகள், பக்தர்கள் அனைவரும் வருகை தந்து ஐயனின் திருவருளைப் பெற்றுக் கொள்ளுமாறு தேவஸ்தான பிரதம குரு சிவஸ்ரீ.கி.ஹரி ஹரசுத சிவாச்சாரியார் அறிவித்துள்ளார். (8)

# பருத்தித்துறை மரக்கறி சந்தை மீண்டும் நவீன சந்தை தொகுதிக்கு



(பருத்தித்துறை)

பருத்தித்துறை மரக்கறி சந்தை மீண்டும் நவீன சந்தை தொகுதிக்கு நேற்று அதி காலை வர்த்தகர்களால் இடம்மாற்றப் பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு பெய்த கடும் மழை காரணமாக வெள்ளம் புகுந்தமையால் மரக்கறி விற்பனை வீழ்ச்சி உட்பட பல்வேறு குறைபாடுகள் காணப்பட்டமையினாலேயே வியாபாரிகள் மரக்கறி சந்தையை அதிரடியாக நவீன சந்தை தொகுதிக்கு மாற்றியுள்ளனர். (8)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ராஜபக்ஷக்களுக்கான மக்கள் ஆதரவு

# பேரணி மூலம் வெளிப்படும்!

## நாமல் சூளுரை



**(கொழும்பு) ..............................**

**அரசாங்கம் மீது அதிருப்தி கொண்டுள்ள பெருமளவு மக்கள் ஒன்றிணைவார்கள் என பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

அரசாங்கத்தின் அடக்குமுறைக்கு எதிராகவும் விவசாயிகள், மீனவர்கள், தொழிலாளர்களுக்கு ஆதரவாகவும் மக்கள் ஒன்று கூடுவார்கள் என நாமல் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நேரத்தில் மக்களுக்காக மேற்கொள்ளப்பட வேண்டிய பொறுப்பு அனைவருக்கும் உள்ளது. கட்சி பேதங்கள் இன்றி அனைவரும் இதில் கலந்து கொள்ள வேண்டும் என அழைப்பு விடுத்துள்ளார்.

ராஜபக்சர்களுக்கு ஆதரவான மக்கள் சக்தியின் பலத்தையும் அரசாங்கத்திற்கு காட்டவுள்ளதாக நாமல் சூளுரைத்துள்ளார்.

அரசாங்கத்தின் அடக்குமுறை, பொய்கள் மற்றும் ஏமாற்றுதலுக்கு மக்கள் தயாராக இல்லை. நாம் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும். அதை நாங்கள் உங்களுக்கு நினைவூட்டுகிறோம். பின்னர் புலம்ப வேண்டாம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை அரசாங்கத்திற்கு எதிராக முன்னெடுக்கப்படவுள்ள போராட்டம் மகிழ்ச்சி அளிப்பதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச ஏற்கனவே தெரிவித்துள்ளார். எனினும் தன்னைத் தேடி வரும் மக்களை பார்வையிடும் நோக்கில், இந்த பேரணியில் கலந்து கொள்ளவில்லை என்றும் தெரிவித்தார்.

அதேவேளை முன்னாள் ஜனாதிபதிகளான ரணில் விக்கிரமசிங்க, சந்திரிக்கா குமாரதுங்க, மைத்திரி பால சிறிசேன ஆகியோரும் இந்த பேரணியில் கலந்து கொள்ளப் போவதில்லை என ஏற்கனவே அறிவித்துள்ளனர். (நி)




**கரவெட்டி பிரதேசசபையின் மரம் நடுகை வேலைத்திட்டம் இந்த மாதம் முழுவதும் பிரதேசத்தின் அனைத்து இடங்களிலும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.**

**(படம்- மகாலிங்கம்)**


## வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம்
## ஆதனப்பெயர் மாற்றம்
### 274, அம்மன் கோவில் வீதி, வட்டாரம்-02

வலிகாமம் மேற்கு பிரதேச சபை அராலி உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் 02, அம்மன் கோவில் வீதியிலுள்ள இல 274 ஆகிய ஆதனம் எமது ஆதனவரிப்பதிவேட்டின் பிரகாரம் **வேலுப்பிள்ளை தியாகராசா** என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை உள்ளடக்கிய முழு ஆதனத்திற்கு **ஐயாத்துரை கனகேஸ்வரன் பெண் நகுலேஸ்வரி** ஆகியவர் குறித்த ஆதனத்தை தனது தந்தையாராகிய காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை கந்தையா ஆகியவர் ஆண்டு வந்தார் எனவும் அவரின் பின் அவரின் ஏக புத்திரியான தான் இவ்வாதனத்தை 25 வருடங்களாக எவ்வித குறுக்கீடுகளோ, தடைகளோ, ஆட்சேபனைகளோ இல்லாமல் ஆட்சிசெய்து வருவதாகவும் குறித்த ஆதனத்திற்குரிய உறுதி இடப்பெயர்வின் போது தொலைந்து விட்டது எனவும், குறித்த உறுதியின் பிரதிகளை காணிப்பதிவு அலுவலகத்தில் எடுப்பதற்கு முயற்சி செய்தும் எடுக்க முடியாமல் போய்விட்டது எனவும் குறித்த ஆதனம் தனக்கே சொந்தமானது எனவும் வெளிப்படுத்தி பிரசித்த நொத்தாரிசு ப.இராசகுரு முகதாவில் 2672/09.04.2000ஆம் இலக்கத்தில் வெளிப்படுத்துகை உறுதியொன்றை நிறைவேற்றியிருந்தார்.

குறித்த **கனகேஸ்வரன் கைம்பெண் நகுலேஸ்வரியும், அவரின் மகளான கனகேஸ்வரன் பிரதீபாவும்** ஆகியவர்கள் பிரசித்த நொத்தாரிசு பரமநாதன் திலக்ஷனா முகதாவில் நிறைவேற்றப்பட்ட 1757/18.07.2023ஆம் இலக்க உறுதியால் **நாகேந்திரம் குகனேஸ்வரன்** ஆகியவருக்கு மேற்படி ஆதனத்தின் ஒரு பகுதியை நிபந்தனை அறுதியாகப் கட்டுப்படுத்தியிருந்தார்கள்.

குறித்த **கனகேஸ்வரன் கைம்பெண் நகுலேஸ்வரியும், கனகேஸ்வரன் பிரதீபாவும்** ஆகியவர்கள் பிரசித்த நொத்தாரிசு பரமநாதன் திலக்ஷனா முகதாவில் நிறைவேற்றப்பட்ட 1924/24.10.2023ஆம் இலக்க உறுதியால் குறித்த **நாகேந்திரம் குகனேஸ்வரன்** ஆகியவரிடமிருந்து மேற்படி ஆதனத்தினை அறுதியாகப் பெற்று மீளச் சொந்தமும் உரித்துமுடையவரானார்கள்.

நாகேந்திரம் **குகனேஸ்வரனும் பெண் மேகலாவும்** ஆகியவர்கள் பிரசித்த நொத்தாரிசு பரமநாதன் திலக்ஷனா முகதாவில் நிறைவேற்றப்பட்ட 1925/24.10.2023 ஆம் இலக்க உறுதியால் குறித்த **கனகேஸ்வரன் கைம்பெண் நகுலேஸ்வரியும், கனகேஸ்வரன் பிரதீபாவும்** ஆகியவர்களிடமிருந்து மேற்படி ஆதனத்தினை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்கள்.

குறித்த நாகேந்திரம் **குகனேஸ்வரனும் பெண் மேகலாவும்** ஆகியவர்கள் ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்கள்.

இவ் ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய **ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும்** அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது நாகேந்திரம் **குகனேஸ்வரனும் பெண் மேகலாவும்** ஆகியவர்களுக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**தவிசாளர்/செயலாளர்,**
**வலிகாமம் மேற்கு பிரதேசசபை.** (5308)


# நல்லூர் கமலாம்பிகை கயிலாயநாதர் ஆலயத்தில் இயம சங்காரம் செய்து அரும்காட்சி செய்த சிவதரிசனம்

## வாரீர் தரிசிப்போம்

**பரிந்து நன் மனத்தால் வழிபடு மாணி**
**தன்னுயிர் மேல் வரும் கூற்றைத்**
**திரிந்திடா வண்ணம் உதைத்த வற்கு அருளும்**
**செம்மையார் நம்மையாளுடையார்**
**விரிந்துயர் மௌவல் மாதவி புன்னை**
**வேங்கை வண் செருந்தி செண் பகத்தின்**
**குருந்தொடு முல்லை கொடிவிடும் பொலிகூழ்**
**கோணமா மலையமந்த தாரே.**
**திருகோணமலைத் திருப்பதிகம்**
**திருஞானசம்பந்தர் 1326- 6**

அன்பர்களே இன்று ஐப்பசி வெள்ளி அன்று இயம சங்காரம். நாம் நெற்றி நிறைய திருநீறு பூசி, நம் பிள்ளைகட்கும், கமலாம்பிகை சமேதகயிலாயநாதன் ஆலயத்தில் திருக்காட்சியைக் காட்டித் தரிசித்தும், சிவபுராணம் ஓதியும், கோணமலைப் பதிகம் பூராகவும் அல்லது "பரிந்து நன் மனத்தால் வழிபடு வழிபடு மாணி தன்னுயிர் மேல் கூற்றைத் திரிந்திடா வண்ணம் உதைத்த வற்கு அருளும் செம்மையார் நம்மை யாளுடையர்" பெரு இறைவன் சிவபெருமான் உலகுலா வாகிய சிவமே உருவாகிய இறைவன் ஆகும்.

பக்தி பெருகும் நம் மனத்தால், அன்பு பெருக வழிபடும் மார்க்கண்டேயரின் உயிரைக் கவர வந்த காலனை, உதைத்த அழித்துப் பாலனைக் காத்தருளும் செம்மை உடையவர், நம்மை ஆளும் சிவபெருமான்.

சுந்தரர் பதிகம் 61 திருக்கச்சி ஏகம்பரம் 624 திருப்பாட்டு " ஆலம்தான் உகந்து அமுது செய்தானை" எனும் திருப்பதிகத்தில் இறுதி வரி "கால காலனைக் கம்பன் எம்மானைக்" இப் பதிகம் கண் பார்வைக் குறைபாடு உள்ளவர்கள் ஓதி பலர் நன்மை அடைந்தார்கள்.

**ஆலம் தான் உகந்து அமுதுசெய் தானை**
**ஆதியை அமரர் தொழுது ஏத்தும்**
**சீலம் தான் பெரிதும் உடையானைச்**
**சிந்திப்பார் அவர் சிந்தை உளானை**
**ஏலவார் குழலார் உமை நங்கை**
**என்றும் ஏத்தி வழிபடப் பெற்ற**
**கால காலனைக் கம்பன் எம்மானைக்**
**காணக்கண் அடியேன் பெற்றவாறே**

எல்லோருக்கும் முதல்வனும், தேவர்கள் வணங்கித் துதிக்கும், மற்றும் உமை என்றும் நங்கை எந்நாளும் துதித்து வழிபடும் முதல்வன் காலனுக்கு காலனாகியவன் எம் பெருமானைக் காணுவதற்கு அடியேன் கண் பெற்றவாறும். நம் சந்ததியினருக்கு சிவபுராணம் திருமுறைகளும் ஓதி நன்னெறி, ஞானநெறி, அதனாற் பெறும் உலகம் சிவலோகம் ஆகும்.காலனிடம் அகப்படோம்.

நாம் ஆலயத்தில் திருக்காட்சிகளை நம் பிள்ளைகட்கு காட்டியும், திருமுறை, சிவபுராணம், விநாயகர் அகவல், திருப்புகழ் தினசரி அவர்களுடன் நாமும் சேர்ந்து ஓதியும் நன்னெறியில், சைவநெறியில் நாமும் வாழ்ந்து எம் வரும்கால சந்ததிகளும் வாழ வழி அமைப்போம்.

ஆலயம் தெற்குக் கோபுரம் அமைய பிரார்த்திப்போம்.

**கோபுர தரிசனம் கோடி புண்ணியம்**
**தூவலிங்க கோபுரம் சிவ சிவ என**
**வணங்கி பாபவிமோசனம் பெற்று**
**சகல அருளும் பெற்று உய்வோம்**

பெரியோர்கள் நமக்கு நலம் தரும் பிள்ளைகளை இறை நாமம் சிவ சிவ எனவும் திருமுறைகளை சேர்ந்து ஆலயங்களிலும், இல்லங்களிலும் தினம், தினம் ஓதுவோம்.

அருள் சுரக்கும் ஆண்டவன் அடியார் தம் உள்ளத்து அன்பே அவரது ஆலயம் அருள் மிகு திருக்கோணேஸ்வரம் திருக்கேதீச்சரம் தரிசிப்போம் வாயுதேவனுக்கும், ஆதி சேஷனுக்கும் நடந்த போட்டியில் மேரு மலையிலிருந்து சிதறிய சிகரங்களில் ஒன்று: இது தென் கயிலாயம் திருக்கோணேஸ்வரம் சிறுவர், பெரியோர் தரிசித்து அருள் பெற வேண்டிய்து அவசியம்.

(C-4325)

**க.கு.க.சிவபாலன் (k.k.k)**
**போசகர் காரைநகர் ஈழத்துச் சிதம்பரம்,**
**மாணிக்கவாசகர் மடாலயம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## பொலிஸுக்கு போன் எடுத்தால் இனி AI தான் பேசுமாம்




(ஒட்டாவா)

கனடாவின் ஹால்டன் பிராந்திய பொலிஸார் அவசரமற்ற தொலைபேசி அழைப்புகளை நிர்வகிக்க தானியங்கி செயற்கை நுண்ணறிவு அமைப்பை அறிமுகப்படுத்தியுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

911 அவசர அழைப்புகள் தொடர்ந்தும் மனித முகவர்கள் மூலம் மட்டுமே பராமரிக்கப்படும் எனவும், ஆனால் அவசரமற்ற அழைப்புகள் இனி "SARA" எனப்படும் நுண்ணறிவு குரல் உதவியாளர் மூலம் நிர்வகிக்கப்படும் எனவும் பொலிஸ் துறையினர் வெளியிடப்பட்ட அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அழைப்பாளர்களிடம் சில குறுகிய கேள்விகள் கேட்டு, அவர்களின் கேள்வி அமைப்பால் தீர்க்கக்கூடியதா அல்லது நேரடி அதிகாரிக்கு மாற்ற வேண்டியதா என்பதை SARA தீர்மானிக்கும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த உரையாடல் நேரடியாக பதிவு செய்யப்பட்டு உரை வடிவில் மாற்றப்படும் என்றும் பொலிஸ் துறையினர் தெரிவித்துள்ளனர்.

அவசரநிலை ஏற்படும் சூழ்நிலை, அழைப்பாளருக்கு ஆங்கிலம் பேச முடியாத நிலை, மொழி பெயர்ப்பு தேவைப்படுவது, அமைப்பு கேள்வியை புரிந்துகொள்ளாதது, அல்லது சந்தேகத்திற்கிடமான நடத்தை கண்டறியப்படுமாயின், உடனடியாக அந்த அழைப்பு மனித முகவருக்கு மாற்றப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

SARA அமைப்பின் செயல்திறனை நாங்கள் நம்புகிறோம் எனவும், தற்போது ஆண்டுக்கு சுமார் 1,60,000 அவசரமற்ற அழைப்புகள் கிடைக்கப்பெறுகின்றன எனவும், இந்த புதிய தொழில்நுட்பம் அவற்றை வேகமாகக் கையாள உதவும் எனவும் ஹால்டன் பிராந்திய பொலிஸார் தெரிவித்துள்ளனர். (நி)

# பள்ளத்தாக்கில் கவிழ்

# 37 பேர் ஸ்தலத்தில்

# பெரு நாட்டில் சோ

(பெரு) ....................

**பெரு நாட்டில் இடம்பெற்ற வாகன விபத்தில் சிக்கி 37 பேர் சம்பவ இடத்தில் உயிரிழந்துள்ளனர்.**






பெரு
இல்லா
அறிவி
அடிக்க
இந்
நாட்டு
நெடுஞ்
பேருந்
லா
பேருந்
உள்ள
அரேக்
கொண்
பேர் இ
வ
எதிரே
பேருந்
200
தாக்கி
சம்பவ

## அமெரிக்கா உடன் போர் பதற்றம் வீரர்களை தயார்படுத்தும் வெனிசுலா

(கராகஸ்)

தென் அமெரிக்கா நாடான வெனிசுலா, கடல் மார்க்கமாக தங்கள் நாட்டுக்குள் போதைப் பொருட்களை கடத்தி வருவதாக, அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் குற்றம்சாட்டி வருகிறார்.

போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கை என்ற பெயரில் பசுபிக் மற்றும் கரீபியன் கடல் பகுதிகளில், சந்தேகத்துக்குரிய கப்பல்கள் மீது தாக்குதல் நடத்தி வருகிறது.



ஆனால், இந்த குற்றச்சாட்டை வெனிசுலா ஜனாதிபதி நிகோலஸ் மதுரோ திட்டவட்டமாக மறுத்து உள்ளார்.

கப்பல்களில் பயணித்தவர்கள் மீனவர்கள், தொழிலாளர்கள் என்றும், சர்வதேச சட்டத்தை மீறி அமெரிக்கா தாக்குதல் நடத்துவதாகவும் அவர் குற்றம்சாட்டினார்.

இந்நிலையில், கரீபியன் கடற்பகுதியில் போர்க் கப்பல்கள், போர் விமானங்களை அமெரிக்கா குவித்து வருகிறது.

அத்துடன், உலகின் சக்தி வாய்ந்த யு.எஸ். எஸ்.ஜெரால்ட் ஆர் போர்ட் என்ற விமானம் தாங்கி போர்க் கப்பலை அனுப்பி வைத்துள்ளது.

இது, போருக்கான அறிகுறியாக பார்க்கப்படுகிறது. இதனால் கோபமடைந்த வெனிசுலா, பதிலடி கொடுக்க ஆயத்தமாகி வருகிறது.

அதன்படி, சிறப்பு அவசர நிலையை ஜனாதிபதி நிகோலஸ் அறிவித்து உள்ளார்.

"பிளான் இன்டிபென்டென்சியா 200" என்ற திட்டத்தின் கீழ் நிலம், கடல், வான் வெளியில் பாதுகாப்பை பலப்படுத்த உத்தரவிட்டுள்ளார்.

ரஷ்யா மற்றும் சீனாவிடமிருந்து பெற்ற வான் பாதுகாப்பு அமைப்புகளும், ஏவுகணைகளும் எல்லையில் தயாராக உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)

## இந்தியாவின் வரி —— ஜனாதிப

(வோஷிங்டன்)

ரஷ்ய மசகு எண்ணெய் வாங்குவது கணிசமாக குறைத்துள்ளதால் இந்தியாவின் வரி குறைக்கப்படும் என ஜனாதிபதி ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க தூதராக செர்ஜியோ கோர் பதவியேற்பு விழாவில் ட்ரம்ப் இது தொடர்பில் கருத்து தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

இந்தியா உடன் ஒரு நியாயமான ஒப்பந்தம் மேற்கொள்ளும் பணி இறுதி கட்டத்தில் உள்ளது. ரஷ்ய மசகு எண்ணெய் வாங்குவது கணிசமாக குறைத்துள்ளதால்

இ
ர
இ
அ
சு
கி
ல
கா
உ
ப
ந
பா
ட
ந

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

## ...ந்த பேருந்து ...ல் உயிரிழப்பு!

### ...சாகம்



...பெரு நாட்டில் போதிய பாதுகாப்பு ...்லாத வீதிகள், உரிய எச்சரிக்கை ...றிவிப்புகள் இல்லாமை ஆகியவற்றால் ...க்கடி விபத்துகள் நிகழ்கின்றன.

இந்நிலையில், பெரு நாட்டை சிலி ...ட்டுடன் இணைக்கும் சுர் ...டுஞ்சாலையில் சரக்கு வான் மீது ...ருந்து மோதி விபத்து ஏற்பட்டது.

...லாமோசாஸ் என்ற நிறுவனத்தின் ...ருந்து காரவேலி மாகாணத்தில் ...ள்ள சாலா என்ற நகரத்தில் இருந்து ...ரேக்விபா என்ற இடத்திற்கு சென்று ...ாண்டிருந்தது. அதில் மொத்தம் 60 ... இருந்தனர்.

...வளைவு ஒன்றில் திரும்பும்போது ...ரே வந்த சரக்கு வான் ஒன்றின் மீது ...ருந்து மோதியது. மோதிய வேகத்தில் ...0 மீற்றர் ஆழம் கொண்ட பள்ளத் ...கில் பேருந்து உருண்டு விழுந்தது. ...பவ இடத்திலேயே 37 பேர் பலியாகினர்.

விபத்து குறித்து தகவலறிந்த தீயணைப்புத் துறை மற்றும் மீட்புக் குழுவினர் உடனடியாக அங்கு விரைந்தனர்.


மீட்புப் பணிகளில் இறங்கிய அவர்கள் இடிபாடுகளில் இருந்த 37 சடலங்களை மீட்டனர்.

படுகாயம் அடைந்த 26 பேரை மீட்டு மருத்துவமனைகளுக்கு அனுப்பி வைத்தனர்.

அவர்களில் 3 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. இதனால் பலி எண்ணிக்கை மேலும் உயரும் எனத் தெரிகிறது. (நி)

## அறிமுக நிகழ்வின் போது சரிந்து விழுந்த ஏ.ஐ ரோபோ

### ரஷ்யாவின் தொழில்நுட்பத்தை விமர்சிக்கும் நெட்டிசன்கள்



(மொஸ்கோ)

ரஷ்யாவில் அறிமுகப் படுத்தப்பட்ட முதல் செயற்கை நுண்ணறிவு ரோபோ பொதுமக்கள் முன்னிலையில் மேடையிலேயே தடுமாறி விழுந்தது.

மொஸ்கோவில் நடந்த நிகழ்ச்சியில், AIdol என்று பெயரிடப்பட்ட மனித உருவிலான ஏ.ஐ. ரோபோ அறிமுகப்படுத்தப்பட்டது.

"ராக்கி" திரைப்படத்தின் இசை பின்னணியில் ஒலிக்க, ரோபோ மிகவும் மெதுவாக மேடையில் நடந்து வந்து, கூட்டத்தினரைப் பார்த்துக் கை அசைத்தது.

பின்னர் சில நிமிடங்களில் ரோபோ தடுமாறி கீழே சரிந்து விழுந்தது.

இந்த வீடியோ இணையத்தில் வைரலாகி உள்ளது.

தொழில்நுட்பம் குறித்து விமர்சனம் கிளம்பி உள்ளது.

இது ரோபோவை தயாரித்த விஞ்ஞானிகளுக்கு தர்ம சங்கடத்தை கொடுத்துள்ளது.

ரோபோ கீழே விழுந்ததும் அருகில் இருந்த ஊழியர்கள் உடனே மேடைக்கு ஓடிச் சென்று சரி செய்ய முயற்சித்தனர்.

ஆனால் எந்த முயற்சியும் கை கொடுக்கவில்லை.




ரோபோவை உருவாக்கிய ரஷ்ய ரோபாட்டிக்ஸ் நிறுவனமான ஐடலின் தலைமை நிர்வாக அதிகாரி விளாடிமிர் விதுகின், இந்த தவறு ஒரு அனுபவமாக மாறும் என கூட்டத்தில் இருந்தவர்களிடம் சமாளிக்கும் வகையில் பேசினார்.

எலான் மஸ்க் டெஸ்லா மாநாட்டில் தனது ரோபோவுடன் ஆடிய வீடியோ வைரலானதை அடுத்து, ரஷ்ய ரோபோ விழுந்த இந்தச் சம்பவம் நடந்துள்ளது.

எலான் மஸ்கின் பழைய ரோபோ வீடியோக்களுடன் ஒப்பிட்டு இது தான் ரஷ்யாவின் தொழில்நுட்ப திறனா என நெட்டிசன்கள் சரமாரியாக விமர்சித்து வருகின்றனர்.

ரோபோ கீழே விழுந்த வீடியோவை பதிவிட்டு ஏராளமானோர் விமர்சித்து இருந்தாலும், ஒரு சிலர் ரோபோவை உருவாக்குவது சாதாரண விடயம் அல்ல எனக் கருத்து பதிவிட்டுள்ளனர். (நி)

## ...ரி குறைக்கப்படும் ...தி ட்ரம்ப் —

இந்தியாவின் வரி குறைக்கப்படும். ரஷ்ய எண்ணெய் காரணமாக இந்தியாவின் மீதான வரிகள் அதிகமாக உள்ளன.

இந்தியாவுடன் மிகவும் வித்தியாசமான ஒப்பந்தம் செய்ய விரும்புகின்றோம்.

இந்தியா - அமெரிக்கா இடையிலான உறவை மேம்படுத்த காத்திருக்கின்றேன்.

மிக முக்கியமான சர்வதேச உறவுகளை செர்ஜியோ வலுப்படுத்துவார் என்று நாங்கள் நம்புகின்றோம். எரிசக்தி ஏற்றுமதி, பாதுகாப்பு ஒத்துழைப்பு உள்ளிட்டவற்றை பாதுகாக்க உதவுவார்.

அமெரிக்க தொழில்கள், தொழில்நுட்பங்களில் முதலீடுகளை ஊக்குவிப்பார் என தெரிவித்துள்ளார். (நி)

## சூரிய கதிர் வீச்சு; பல இடங்களில் மின்தடை

(நியூயோர்க்)

சூரியனில் இருந்து அதிக வீரியம் வாய்ந்த கதிர் வீச்சு வெளிபட்டதால், ஐரோப்பா, ஆபிரிக்கா கண்டம் முழுதும் தொலைத்தொடர்பு பாதிக்கப்பட்டது. பெரும்பாலான இடங்களில் மின்தடை ஏற்பட்டது.

அமெரிக்காவின் வோஷிங்டனில் உள்ள என்.ஓ.ஏ.ஏ., எனப்படும் கடல் மற்றும் வளிமண்டலத்தை ஆய்வு செய்யும் முன்னணி அறிவியல் மையம், கடந்த செவ்வாய்க்கிழமை சூரியனில் இருந்து அதிக வீரியம் வாய்ந்த கதிர் வீச்சு வெளிப்பட்டதை உறுதி செய்தது.

இது, 2025ஆம் ஆண்டில் பதிவான வலுவான சூரிய கதிர் வீச்சு என்று அந்த மையம் தெரிவித்தது.

ஆராய்ச்சியாளர்கள் சூரிய கதிர் வீச்சை, "ஏ, பி, சி, எம், எக்ஸ்" என ஐந்து வகைகளாக பிரித்து வைத்துள்ளனர்.

ஒவ்வொரு வகையும் முந்தையதை விட 10 மடங்கு ஆற்றல் கொண்டது.

தற்போது எக்ஸ் - 5.1 என வகைப்படுத்தப்பட்ட சூரிய கதிர் வீச்சு நிகழ்ந்துள்ளதாக என்.ஓ.ஏ.ஏ., தெரிவித்துள்ளது.

அது, செயற்கைக்கோள் தொடர்புகள், ஜி.பி.எஸ்., எனப்படும் இருப்பிடத்தை அடையாளம் காட்டும் அமைப்பு மற்றும் மின்சார கட்டமைப்புகளை பாதிக்கும் திறன் கொண்டது.

அந்த வகையில், தற்போது ஏற்பட்டுள்ள சூரிய கதிர் வீச்சால், ஐரோப்பா மற்றும் ஆபிரிக்காவில் ரேடியோ அலை வரிசையை தாக்கியது.

இதனால், இந்த கண்டங்களில் உள்ள பெரும்பாலான நாடுகளில் தொலைத்தொடர்பு வசதி பாதிக்கப்பட்டது.

மேலும், மின்சார தடையும் ஏற்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (நி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னையில் வேர் வாடல் நோய் மாத்தறை மாவட்டத்தில் தீவிரம்

**(மாத்தறை) -----------------**
**மாத்தறை மாவட்டத்தில் "வெலிகம விண்ட்" எனப்படும் தென்னையின் வேர் வாடல் நோய் வேகமாகப் பரவி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.**

இதனையடுத்து, இந்த நோயைக் கட்டுப்படுத்தும் நோக்குடன், சுமார் 5,000 தென்னை மரங்களை வெட்டி அழிக்க தென்னைப் பயிர்ச்செய்கை சபை முடிவு செய்துள்ளது.

"ரெண்டா மக்குன" என்று உள்ளூரில் அழைக்கப்படும் ஊடுருவும் பூச்சி இனத்தால் ஏற்படும் இந்த நோய், மாவட்டத்தில் ஏற்கனவே சுமார் 6,250 மரங்களைப் பாதித்துள்ளதாக தென்னைப் பயிர்ச்செய்கை சபையின் தலைவர் சுனிமல் ஜயக்கொடி, தெரிவித்தார்.

"இந்த நோய் கடந்த 15 ஆண்டுகளாகத் தென் மாகாணத்தில் தென்னைப் பயிர்ச்செய்கைக்குப் பெரும் அச்சுறுத்தலாக இருந்து வருகிறது.

இதன் பரவல் நாட்டின் மற்ற பகுதிகளுக்குத் தடுக்கப்பட்டுள்ள போதிலும், தெற்கில் இது தொடர்ந்து ஒரு பெரிய பிரச்சினையாக உள்ளது," என்று அவர் தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட மரங்கள், தேங்காய்களை உற்பத்தி செய்வதை நிறுத்தி விட்டு, இரண்டு ஆண்டுகளுக்குள் இறந்துவிடுகின்றன.

ஏனெனில், நோய்க்குக் காரணமான பக்றீரியாவைச் சுமந்து செல்லும் பூச்சிகள் மூலம் இது எளிதில் பரவுகிறது.

"இதுவரை, நோயின் பரவலைக் கட்டுப்படுத்த நாடு முழுவதும் சுமார் 325,000 தென்னை மரங்களை நாங்கள் வெட்டி அகற்ற வேண்டியிருந்தது.

-மாத்தறையில் உள்ள பாதிக்கப்பட்ட 6,250 மரங்களில், தற்போது 5,000 மரங்களை அகற்றத் திட்டமிட்டுள்ளோம்," என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (நி)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு:1997 - இந்து
நட்சத்திரம்: சித்திரை
8இல்செவ்
தகைமை/தொழில்: BSC, Redio grapher
எதிர்பார்ப்பு : பட்டதாரி
தொ.இ: B/16218

பிறப்பு: 1984 - இந்து
நட்சத்திரம்: விசாகம்
1இல்செவ்
கி-பா-73 1/4
உயரம்: 5'7"
தகைமை/தொழில்: A/L, Contruction
எதிர்பார்ப்பு - தகுதியான பெண்
தொ.இ: B/16219

பிறப்பு:1988 - இந்து
நட்சத்திரம் : கேட்டை
2இல்செவ்
கி.பா- 40
உயரம்:5'9"
தகைமை/தொழில்:DipCourse,Work (Gov)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16220

பிறப்பு :1996 - இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
7இல்செவ்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்:Bed, Teacher
எதிர் பார்ப்பு - அரச உத்தியோகம், வெளிநாடு
தொ.இ: B/16221

பிறப்பு:1991 - இந்து
நட்சத்திரம்: ரேவதி
1இல்செவ்
கி.பா: 41
உயரம்:5'9"
தகைமை/தொழில்- Degree, Senior Manager (USA)
எதிர்பார்ப்பு: விவாகரத்தானவர்கள்
தொ.இ: B/16226

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு-1991 - இந்து
நட்சத்திரம்: உத்தராடம்
கி.பா: 37
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: MBBS, Doctor.
எதிர்பார்ப்பு: Doctor, Engineer, Lecturer, Lawyer
தொ.இ: G/15014

பிறப்பு -1992 - இந்து
நட்சத்திரம்: மூலம்
கி.பா: 36
உயரம்: 5'2"
தகைமை/தொழில் - MBBS, Doctor.
எதிர்பார்ப்பு - Doctor, Engineer, Lecturer, Lawyer
தொ.இ: G/15015

பிறப்பு - 2000 - இந்து
நட்சத்திரம்: அச்சுவினி
கிபா- 21
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: University Final Year Student.
எதிர்பார்ப்பு - Doctor, Engineer, Lecturer, Bank Officers, Teachers.
தொ.இ: G/15018

பிறப்பு -1995 - இந்து
நட்சத்திரம்: மகம்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்- Political Science, Senior Officer (Australia).
எதிர்பார்ப்பு - Degree and Employee
தொ.இ: G/15002

பிறப்பு-1988 - இந்து
நட்சத்திரம்: உத்தரட்டாதி
கி.பா-37
உயரம்: 5'5"
தகைமை/தொழில்:Degree,Teacher (Australia)
எதிர்பார்ப்பு - பட்டதாரி, உத்தியோகம்
தொ.இ: G/15003

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# இன்று ஒரு தகவல் 483



தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## நிம்மதி எங்கே?

அந்த காலத்திலே ஒரு ஞானி இருந்தார்.

அவர் பேர் டயோஜனிஸ். ஆற்றங்கரை மணலிலே சும்மா படுத்திருந்தார். அலெக்சாண்டர் இந்தியாவுக்குப் புறப்பட்டபோது அவரைப் போய்ப் பார்த்தார்.

ஞானி அவரைப் பார்த்து, "நீ எங்கே போறாய்?"எதற்காகப் போறாய்?" என்று கேட்டார்.

"நான் ஆசியா மைனரை வெல்லப் போகிறேன்!" என்றார் இவர்.

"அதன்பின் என்ன செய்யப் போகிறாய்?" என்றார்.

"இந்தியாவை வெல்வேன்!" என்றார்.

"அதன்பின்?" என்று கேட்டார் அந்த ஞானி, "உலகத்தையே வெல்வேன்!" என்றார் அலெக்சாண்டர்.

"உலகம் முழுவதும் ஜெயித்து விட்டு அதன்பின் என்ன செய்யப் போகிறாய்?" என்று அவர் மறுபடியும் கேட்டார்.

"அதன்பின் நான் நிம்மதியாக ஓய்வெடுப்பேன்!" என்றார். அலெக்சாண்டர்.

இந்தப் பதிலைக் கேட்டதும் ஆற்று மணலிலே படுத்திருந்த அந்த ஞானி சத்தம் போட்டுச் சிரித்தார்.

கொஞ்ச தூரத்திலே படுத்திருந்த தன்னுடைய நாயைக் கூப்பிட்டார். அது அவர் பக்கத்திலே வந்து நின்றது. ஞானி அந்த நாயிடம் சொன்னார்.

"பார்த்தாயா! இவர் சொல்வதை? உலகத்தை யெல்லாம் ஜெயித்ததற்கு அப்புறம் இந்த மனிதர் ஓய்வு எடுக்கப் போகிறாராம்! ஆனால் நாம் இரண்டுபேரும் இங்கே ஒரு சின்ன இடத்தைக்கூட ஜெயிக்காமல் நிம்மதியாக ஓய்வு எடுத்துக் கொண்டிருக்கிறோம்!" என்றார்.

நாயிடம் இப்படி சொல்லிவிட்டு அதன்பின் அலெக்சாண்டரைப் பார்த்துச் சொன்னார்.

"இதோ பாருப்பா... ஓய்வுதான் உன்னுடைய கடைசி இலட்சியம் என்றால் இந்த அழகான ஆற்றங்கரையிலே எங்களோடு நீ இப்போதே சேர்ந்து கொள்ளலாமே! கடைசியிலே ஓய்வு எடுப்பதற்காக வேண்டி, ஏன் உலகம் முழுவதும் துன்பத்தையும் துயரத்தையும் உண்டாக்க வேண்டும்? இப்போதே இங்கேயே நீ ஓய்வு எடுக்கலாமே!" என்றார். இதைக் கேட்டதும் அலெக்சாண்டர் ஒரு மாதிரியாகி ஆகிவிட்டார்.

நான் இப்போதும் ஓய்வு எடுக்க முடியாது. முதலிலே உலகத்தை ஜெயிச்சுவிட்டு வருகிறேன்!" என்றார்.

"நீங்கள் சொல்வது அறிவு பூர்வமாகத்தான் இருக்கிறது. ஆனால் "உலகத்தை ஜெயிப்பதற்கும் ஓய்வு எடுப்பதற்கும் சம்பந்தம் எதுவும் இருக்கிறதாகத் தெரியவில்லையே!" என்றார் அவர்.

"நீங்கள் சொல்வது நியாயம் தான். ஆனாலும் நான் ஏற்கனவே புறப்பட்டு விட்டேன். பாதியிலே பின் வாங்க வழியில்லை!" என்றார்.

ஞானி சொன்னார். "நீ பாதி வழியிலே திரும்பத்தான் போகிறாய்! ஏனென்றால் பயணம் முடிந்த பிறகு யார்தான் இதுவரைத் திரும்பி வந்திருக்கிறார்கள்?" என்றார்."

ஞானி சொன்ன தீர்க்க தரிசனம்தான் பலித்தது.

நாடு திரும்பும்போது பாதி வழியிலேயே அலெக்சாண்டர் இறந்து போனார். இந்த நிகழ்ச்சியை சொல்கிற ஒரு பெரியவர் (ஓஷோ) வாழ்வின் உண்மைகளை விளக்குகிறார்.

"எல்லா அலெக்சாண்டர்களுமே செத்துத்தான் போகிறார்கள். பாதி வழியிலே" என்கிறார் அவர்.

அவர்கள் செல்வங்களைச் சேர்க்கிறார்கள். ஆனால் அதை அனுபவிக்க அவர்களுக்கு நேரம் கிடைப்பதில்லை.

அப்படிப்பட்டவர்கள். எல்லா இசைக் கருவிகளையும் சேகரித்து விடுகிறார்கள்.

சரியான தருணத்திலே அதையெல்லாம் வாசிக்கின்ற சக்தியை அவர்கள் இழந்துவிடுகிறார்கள்.

கடைசியிலே வெறுங்கையோடு ஒன்றும் செய்ய முடியாமல் அவர்கள் எல்லாம் அழ ஆரம்பித்துவிடுகிறார்கள். இன்றைக்குப் பலபேர் வாழ்க்கையிலே இதுதான் நடந்துகொண்டிருக்கிறது.

கைக்கு எட்டிய தூரத்திலே இருக்கின்ற நிம்மதியைத் தேடி கழுத்தைச் சுத்தி வந்துகொண்டிருக்கிறோம்.

அப்படி வந்து சேர்வதற்குள்ளே நிம்மதி காணாமல் போய் விடுகிறது.

இந்தக் காலத்திலே ஒருவர். ஒருநாள் நடு ராத்திரி ஒரு சாலை வழியாக வந்துகொண்டிருந்தார். வழியிலே ஒருவர் அவரைப் பார்த்தார். "யார் நீங்கள்? இந்த ராத்திரி வேளையிலே எங்கே இப்படி போகிறீர்கள்?" என்று கேட்டார்.

"வாழ்க்கையிலே நிம்மதி இல்லாமல் போய் விட்டது. இப்போது நான் நிம்மதியைத் தேடித்தான் போய்க்கொண்டிருக்கிறேன்." என்றார் அவர்.

"அப்படி என்றால் என்னோடு வாருங்கள். இங்கேயிருந்து 5 கிலோ மீற்றர் தூரத்திலே ஒரு ஆச்சிரமம் இருக்கு. அங்கே ஒரு சாமியார் இருக்கிறார். அவரிடம் போனால் நமக்கு நிம்மதி கிடைக்கும்!" என்றார் இவர்.

இதற்கு அவர் சொன்னார்.

"நல்லா பாருப்பா. நான்தான் அந்த சாமியார். அங்கேயும் இப்போது நிம்மதி இல்லை. பொலிஸ் விசாரணை ஆரம்பமாகி விட்டது. அதுதான் புறப்பட்டுவிட்டேன் என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகரித்த இரசாயன உரப் பாவனையால் விளைநிலங்கள் உவர்த்தன்மை அடைகின்றன

## விவசாய ஆராய்ச்சிப் பிரிவின் மேலதிக பணிப்பாளர்

(கண்டாவளை)

**கிளிநொச்சி மாவட்டத்தில் அதிகரித்து வரும் இரசாயன உரப்பாவனையால் வளமான விளைநிலங்கள் உவராகும் தன்மை அதிகரித்து வருவதாக விவசாய ஆராய்ச்சி பிரிவின் மேலதிக பணிப்பாளர் எஸ்.ராஜேஸ்கண்ணா தெரிவித்துள்ளார்**



இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், கிளிநொச்சி மாவட்டத்தில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டு வரும் பெருந்தொகையான காணிகளில் தற்போது உவர் தன்மை அதிகரித்து வருகின்றமை அவதானிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக பூநகரி அக்கராயன் குளம் தட்டுவன்கொட்டி கண்டாவளை ஊரியான் போன்ற பகுதிகளில் இவ்வாறு விவசாய நிலங்கள் மிக வேகமாக உவராகி வருகின்றன.

குறிப்பாக ஏற்கனவே காணப்பட்ட உவர் நீர் தடுப்பணைகள் அழிவடைந்துள்ளமை மற்றும் அதிகரித்த இரசாயன உரப்பாவனை என்பவற்றின் விளைவாகவே இவ்வாறு உவர் பரம்பல் அதிகரித்து வருகின்றன என்று பலரும் குறிப்பிட்டுள்ளனர்.

அதிகரித்த இரசாயன உரப் பாவனை மற்றும் அங்கீகரிக்கப்படாத இரசாயன உரங்களை பயன்படுத்துதல் என்பன காரணமாக அதிகளவான உவர் பரம்பல் ஏற்பட்டிருக்கின்றது. குறிப்பாக ஐயாயிரம் ஏக்கருக்கு மேற்பட்ட நிலங்கள் இவ்வாறு உவர் நிலங்களாக மாறி உள்ளன.

எனவே விவசாயிகள் சேதன உரத்தினை விளைநிலங்களுக்கு பயன்படுத்த வேண்டும் தொடர்ச்சியாக இரசாயன உரங்களை பாவிப்பதால் வளமான விளை நிலங்கள் உவரடைந்து வருகின்றன

இது தொடர்பில் விவசாயிகள் கூடிய கவனம் செலுத்த வேண்டும் கடல் நீர் உட்புகுவதால் மட்டும் உவர்தன்மை ஏற்படுவதில்லை. பல்வேறு இடங்களிலும் பெறப்பட்ட மண் மாதிரிகளை பரிசோதனைகளுக்கு உட்படுத்திய போது அநேக இடங்களில் உவர்த்தன்மை அவதானிக்கப்பட்டுள்ளது என அவர் தெரிவித்தார். (8-315)

# ஏல விற்பனை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்ற வளாகத்தில் இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு 32 டிப்பர் மணல், 6 டிப்பர் கிரவல், இரும்பு, சவல், கோடரி, தகரபரல், அலுமினியங்கள் மற்றும் பாத்திரங்கள் என்பன ஏல விற்பனை செய்யப்படவுள்ளதாக நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (8)

## சந்தைகளில் நேற்றைய விலை

பொருளாதார மத்திய நிலையம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மட்டுவில் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 200 | 250 | 250 | 220 |
| உருளைக்கிழங்கு | 220 | 210 | 180 | 240 | 180 |
| பச்சைமிளகாய் | 200 | 300 | 250 | 250 | 240 |
| தக்காளி | 180 | 180 | 180 | 200 | 150 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 160 | 200 | 120 | 200 |
| கோவா | 180 | 180 | 200 | 250 | 180 |
| கரட் | 250 | 260 | 300 | 300 | 220 |
| பூசணி | 80 | 80 | 50 | 100 | 50 |
| புடோல் | 180 | 300 | 120 | 250 | -- |
| வாழைக்காய் | 100 | 80 | 50 | 150 | 80 |
| சின்ன வெங்காயம் | 300 | 200-300 | 200 | 350 | 150-250 |
| பெரிய வெங்காயம் | 180 | 190 | 150 | 200 | 180 |
| பாகற்காய் | 600 | 600 | 400 | 1500 | 400 |
| வெண்டக்காய் | 200 | 180 | 120 | 200 | 100 |
| கருணைக் கிழங்கு | 200 | 220 | 200 | 300 | -- |
| பயற்றங்காய் | 200 | 300 | 300 | 200 | 200 |
| லீக்ஸ் | 300 | 250 | 250 | 250 | 160 |
| பீற்றூட் | 200 | 180 | 120 | 200 | 150 |
| கறிமிளகாய் | 600 | 450 | 600 | 500 | 600 |
| முருங்கைக்காய் | 500 | 600 | 400 | 500 | 400 |
| போஞ்சி | 400 | 400 | 400 | 600 | 350 |
| கத்தரிதம்புள்ள | 200 | 150 | 120 | 200 | -- |
| கீரை - 1 பிடி | 120 | 40-120 | 80 | 120 | -- |
| தேசிக்காய் | 1700 | 1400 | 1000 | 800 | -- |
| தேங்காய் (ஒன்று) | 180 | 210 | 160 | 150-200 | -- |
| இராசவள்ளி | 500 | 600 | 500 | 800 | -- |
| வெங்காயப்பூ | 600 | -- | -- | -- | -- |
| முள்ளங்கி | 200 | 200 | 150 | 240 | 150 |
| பொன்னாங்காணி | 100 | 70 | 100 | 60 | -- |
| வல்லாரை | 80 | 50 | 50 | 80 | -- |
| ஈரப்பலா | -- | 150 | 120 | 200 | -- |

# இராசிபலன்

14.11.2025,
ஐப்பசி 28 , வெள்ளிக்கிழமை
தசமி பின்னிரவு 4.53 மணிவரை

பூரம் பின்னிரவு 1.44 மணிவரை
சுபநேரம் 6.07-7.37 மணிவரை
இராகுகாலம் 10.37-12.07 மணிவரை
குழந்தைகள் தினம்

சந்திராஷ்டமம்
உத்தராடம், திருவோணம்

வளவன்

**மேஷம்**
அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், வழிபாடு திருப்தி தரும், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.

**இடபம்**
தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் செய்திகள் வந்து சேரலாம், உறவினர் வழியில் எதிர்பார்த்த நற்பலன் கிடைக்கும், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.

**மிதுனம்**
இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள்.

**கடகம்**
குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில சம்பவங்கள் நடைபெறலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு, புதிய சொத்துக்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

**சிம்மம்**
நண்பர்கள் ஒளிவு மறைவின்றி பழகுவார்கள், திட்டமிட்ட காரியங்களில் திருப்பங்கள் ஏற்படலாம், அனுபவத்தின் வாயிலாக பல தகவல்களை அறிந்து கொள்வீர்கள்.

**கன்னி**
ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள், விருந்துகளில் கலந்து கொள்ள அழைப்புக்கள் வந்து சேரலாம்.

**துலாம்**
அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், வழிபாட்டில் ஆர்வம் கூடும், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.

**விருச்சிகம்**
வழிபாட்டில் ஆர்வம் கூடும், செய்தொழிலில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், சுப காரியச் செலவுகளில் முன்னேற்றமுண்டு.

**தனுசு**
குடும்பத்தினரிடையே இருந்த மனஸ்தாபம் அகலும், உதாசீனப்படுத்தியவர்கள் உதவி கேட்டு வரலாம், வழிபாடு ஆனந்தம் தரும், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.

**மகரம்**
சிலர் பாராட்டுவது போல் உங்களை விமர்சிக்கலாம், மகிழ்ச்சி வந்து சேர இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், வேலைகள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம்.

**கும்பம்**
மதிநுட்பத்தால் மகத்தான காரியமொன்றை செய்து முடிப்பீர்கள், வழிபாட்டில் ஆர்வம் கூடும், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும், போசன சுகமுண்டு.

**மீனம்**
உடல் நலனில் இருந்த பாதிப்புக்கள் அகலும், சச்சரவை விட்டு சாதித்துக் காட்டும் நாள், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.

கொடுத்தும் குறையாதது வாக்குறுதி மட்டுமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 909





என்று அலறிக் கொண்டு மந்தாகினிப் பேயின் முகத்தைக் குறி பார்த்து வீசி எறிந்தார். திருமால் எறிந்த சக்ராயுதத்தைப் போல் அந்தத் தீபம் சுடர்விட்டு எரிந்த வண்ணம் அந்தப் பெண்ணுருவத்தை நோக்கிப் பாய்ந்து சென்றது.

அப்போது சுந்தர சோழர் பேய் என்று கருதிய அந்தப் பெண் உருவத்தில் வாயிலிருந்து ஓர் ஓலக்குரல் கிளம்பிற்று.

சுந்தர சோழருடைய ஏழு நாடியும் ஒடுங்கி, அவருடைய உடலும் சதையும் எலும்பும் எலும்புக்குள்ளே இருந்த ஜீவ சத்தும் உறைந்து போயின: தீபம் அந்த உருவத்தின் முகத்தின் மீது விழவில்லை. சற்று முன்னாலேயே தரையில் விழுந்து உருண்டு 'டணங் டணங்' என்று சத்தமிட்டது.

அகல் விளக்கு அணைந்து விட்ட போதிலும், நல்ல வேளையாக அந்த அறையின் இன்னொரு பக்கத்தில் வேறொரு தீபம் எரிந்து கொண்டிருந்தது. அதன் மங்கலான வெளிச்சத்தில் சுந்தர சோழர் உற்றுப் பார்த்து, மந்தாகினியின் ஆவி வடிவம் இன்னும் அங்கேயே நிற்பதைக் கண்டார். அதனுடைய முகத்தில் விவரிக்க முடியாத வேதனை ஒரு கணம் காணப்பட்டது. பின்னர் அது கடைசி முறையாக ஒரு தடவை சுந்தர சோழரை அளவில்லாத ஆதங்கத்துடன் பார்த்துவிட்டுத் திரும்பி அங்கிருந்து போவதற்கு யத்தனித்தது.

அந்த நேரத்திலேதான் சுந்தர சோழரின் உள்ளத்திலே முதன் முதலாக ஒரு சந்தேகம் உதித்தது. இது மந்தாகினியின் ஆவி உருவமா? அல்லது அவள் வடிவத்தில் முழுக்க முழுக்க ஒத்த இன்னொரு ஸ்திரீயா? அவளுடன் இரட்டையாகப் பிறந்த சகோதரியா? அல்லது ஒரு வேளை ஒரு வேளை அவளேதானா? அவள் சாகவில்லையா? இன்னமும் உயிரோடிருக்கிறாளா? தாம் நினைத்ததெல்லாம் தவறா? அவளேயாக இருக்கும் பட்சத்தில் அவள் பேரில் தாம் விளக்கை எடுத்து எறிந்தது எவ்வளவு கொடுமை! அவளுடைய முகத்தில் சற்று முன் காணப்பட்ட பரிதாபம் மாறி, விவரிக்க முடியாத வேதனை தோன்றியதே? தம்முடைய கொடூரத்தை எண்ணி அவள் வேதனைப் பட்டாளோ? ஆகா! அதோ அவள் திரும்பிப் போக யத்தனிக்கிறாள். எந்தப் பக்கம் போகலாம் என்று பார்க்கிறாள்.

"பெண்ணே! நீ கரையர் மகள் மந்தாகினியா? அல்லது அவளுடைய ஆவி வடிவமா? அல்லது அவளுடன் பிறந்த சகோதரியா? நில், நில்! போகாதே! உண்மையைச் சொல்லிவிட்டுப் போ!"

இவ்விதம் சுந்தர சோழர் பெரும் குரலில் கூவிக் கொண்டிருந்த போது தடதடவென்று பலர் அந்த அறைக்குள் புகுந்தார்கள். மலையமான் மகள், குந்தவை, வானதி, பூங்குழலி, முதன்மந்திரி, அவருடைய சீடன், அத்தனை பேரும் அறைக்குள்ளே வருகிறார்கள் என்பதைச் சுந்தர சோழர் ஒரு கண நேரத்தில் தெரிந்து கொண்டார்.

"நிறுத்துங்கள்! அவள் ஓடிப் போகாமல் தடுத்து நிறுத்துங்கள்! அவள் யார், எதற்காக வந்தாள் என்பதைக் கேளுங்கள்!" என்று சுந்தர சோழர் அலறினார்.

தொடரும்...



# சிறுவர் அரங்கம்

## மூத்தவனுக்கு ஏற்பட்ட மதிப்பு



ஒரு ஊரில் ஐந்து சகோதரர்கள் இருந்தார்கள். அவர்களுக்குத் தகப்பன் இல்லை. தாய் மட்டுமே இருந்தாள்.

மூத்தவன் வீட்டில் இருந்து குடும்பத்தைக் கவனித்தான். ஊர் விவகாரங்களையும் தீர்த்து வைத்துக் கொண்டிருந்தான்.

மற்ற நால்வரும் சொந்த நிலத்தை உழுது பயிர் செய்து வந்தனர். எல்லோரும் ஒற்றுமையாக இருந்தார்கள்.

மூத்தவனிடம் ஊர்க்காரர்கள் வந்து மரியாதையாக யோசனைக் கேட்டுப் போவதால், தாய்க்கு அவனிடம் பிரியம். அவனுக்கு அரிசிச் சோறும், மற்றவர்களுக்கு கம்மஞ் சோறும் போடுவாள்.

ஒரு நாள் சகோதரர்களுக்குள் ஏதோ வாக்குவாதம் முற்றியது.

மூத்தவனிடம், "நாங்கள் உழவு வேலை பார்ப்பதும், நீ வீட்டில் இருப்பதும் என்ன நியாயம்? நீயும் எங்களுடன் வந்து உழவு வேலையைக் கவனி" என்று சொன்னார்கள்.

மறுநாள், அவர்களோடு மூத்தவனும் புறப்பட்டான்.

தாய்க்கு மூத்தவனைப் பற்றிக் கவலை, உழவு வேலைக்கு போகாதவன் வெயிலில், கலப்பை பூட்டி எப்படி உழுவானோ என்று வருத்தப்பட்டாள்.

நால்வருக்கும் கம்மஞ் சோறு கட்டி, மூத்தவனுக்கு மட்டும் அரிசிச் சோறும், பதார்த்தமும் வைத்துக்கட்டி, எல்லாவற்றையும் ஒரே பொட்டலமாகக் கொடுத்து அனுப்பினாள் தாய்.

அடுத்த ஊரிலிருந்து மூத்தவனைத் தேடி ஒரு விவகாரம் வீட்டுக்கு வந்தது. விசாரித்து விஷயம் தெரிந்து கொண்டு நிலத்துக்குச் சென்றனர்.

விவகாரம் சொல்ல வந்தவர்களில் ஒருவன் மூத்தவனிடம், "ஐயா, இந்த விவகாரத்தை தீர்த்து வையுங்கள்.

தொடரும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் மனம் அழகாக இருந்தால் நீங்கள் காணும் காட்சிகளும் அழகாகவே இருக்கும்.
- சோக்ரட்டீஸ்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## மனிதநேயம் இல்லாத அணுகுமுறை மலிந்து விட்டது

எதிர்வரும் காலங்களில் எங்கள் வட மாகாணத்தில் எந்த நிர்வாக நடவடிக்கைகளையும் செய்ய முடியாத ஓர் இக்கட்டான சூழ்நிலை ஏற்படும் என்பதை அடித்துக்கூறமுடியும்.

அந்தளவுக்கு நிலைமை மாறிவருகிறது. இதற்கு மூலகாரணம் வட மாகாணத்தில் உள்ள உயர் அதிகாரிகளின் சர்வாதிகாரப் போக்கு என்பதைக் கூறமுடியும்.

ஆம், வட மாகாணத்தில் ஒரு குறிப்பிட்ட உயர் அதிகாரிகளைத் தவிர, மற்றவர்கள் சர்வாதிகாரிகளாகவே இருக்கின்றனர்.

இவ்வாறான நிலைமை வடக்கின் ஆளுநராக திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் இருந்த காலத்தில் ஏற்பட்ட துயரம் எனப் பலரும் கூறிக் கொள்வர்.

ஆம், அவர் ஆளுநராக இருந்தபோது தனக்கு ஏற்ற அதிகாரிகளுக்கு பக்கச்சார்பாக செயற்பட்டார் என்றும் அதனூடு அதிகாரிகளின் சர்வாதிகாரம் தலைக்கேறத் தொடங்கியது என்றும் கூறப்படுகிறது.

இதன் காரணமாக மனிதாபிமானம் இல்லாத - பண்பற்ற கலந்துரையாடல்கள் எங்கள் மண்ணில் மலியத் தொடங்கிற்று.

உண்மை. உயர் அதிகாரிகள், பொதுமக்களுடனும் அரச பணியாளர்களுடனும் பண்பற்றுக் கதைக்கவும் அதட்டவும் முற்பட்டனர்.

தவிர, அரச பணியாளர்களை வஞ்சிக்கவும் தலைப்பட்டனர். இதன் விளைவாக தொழிற்சங்க நடவடிக்கைகள் நம் மண்ணில் தீவிர மாகின.

இதனூடு தான் கூலிக்கு மாரடிக்கும் துரோகிகள் சிலர்நம் வட மாகாணத்துக்குள் நுழைந்து கல்விக் கட்டமைப்பில் தலையிட்டு எங்கள் கல்வியைக் கடைநிலைக்குக் கொண்டுவந்தனர்.

இதில் தென்பகுதிப் பேரினவாதிகள் எதை விரும்பினார்களோ அதை ஒரு சில தொழிற்சங்கத்தின் உயர்மட்ட நிர்வாகத்தினர் செய்து முடித்து அதற்குரிய ஊதியத்தையும் பெற்றுக் கொண்டனர்.

அந்த விளைவை இப்போது நம் மண் அனுபவித்துக் கொண்டிருக்கிறது.

என்ன செய்வது அண்மையில் வட மாகாணத்தின் கல்விப் புலத்தில் உயர் பதவியில் இருந்த ஒருவர் காலமாகியிருந்தார்.

பொதுவில் ஒருவரின் இறப்பில்தான் அவரின் திறமைகளும் அவரின் நற்செயல்களும் பேசப்படும்.

ஆனால் நடைமுறைக்கு மாறாக, பிரஸ்தாப அதிகாரிக்கு எதிரான கருத்துக்கள் சமூக வலைத்தளங்களில் பதிவேற்றம் செய்யப்பட்டமை கண்டு அதிர்ந்து போனோம்.

என்னதான் இருந்தாலும் இறந்துவிட்டார் எனும்போது நம்மை அறியாமல் மனம் நெகிழ்வதுதான் மனித இயல்பு.

ஆனால் அந்த இயல்பையும் மீறி அவர் மீது கடும் வார்த்தைகள் கொப்பளித்துள்ளன எனும் போதுதான் உயர் அதிகாரிகளின் வார்த்தைகளால் மற்றவர்களின் மனம் எத்துணை தூரம் புண்பட்டுள்ளன என்பதை உணர முடிகிறது.

எனவே தயவு செய்து மனிதர்களுடனான கலந்துரையாடல்களை பண்போடும் மனித நேயத்தோடும் செய்து கொள்ளுங்கள்.

அதுவொன்று போதும் எத்தனையோ சிக்கல்களை- பிரச்சினைகளை சுமுகமாகத் தீர்ப்பதற்கு.

# அரசியல் குடும்பங்களால் கையாடப்பட்ட உலக வங்கியின் கோடிக்கணக்கான நிதி

## பகிரங்கப்படுத்தியது அநுர அரசு

(கொழும்பு)

உலக வங்கி கடன் திட்டத்தின் கீழ் நாட்டின் விவசாயத்துறை வளர்ச்சி மற்றும் தொழில் முனைவோருக்காக ஒதுக்கப்பட்ட நிதியை கடந்த அரசாங்க காலத்தில் கோலோச்சிய அரசியல்வாதிகளின் குடும்பங்கள் பெற்று திருப்பிச் செலுத்தாது மோசடியில் ஈடுபட்டுள்ளதாக குற்றம் சாட்டிய விவசாய அமைச்சர் சமந்த வித்யாரத்ன அவர்களது பெயர் பட்டியலை நேற்றுப் பாராளுமன்றத்தில் பகிரங்கப்படுத்தினர்.

அதன்பிரகாரம் முன்னாள் அமைச்சர் தயா கமகேயின் மனைவி அனோமா கமகேவுடன் தொடர்புடைய நிறுவனம் 14.95 மில்லியன் ரூபாவைப் பெற்றுள்ளது.

அத்துடன் தயாகமகேயின் கீழ் பணியாற்றிய முன்னாள் அமைச்சக செயலாளர் பந்துல விக்ரமாராச்சியின் மகன் 8.2 மில்லியன் ரூபா பெற்றுள்ளார்

அசாஹி கொன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிடெட் என்ற முன்னாள் அமைச்சர் ரோஷன் ரணசிங்கவின் மனைவிக்குச் சொந்தமானதாகக் கூறப்படும் நிறுவனம் 18 மில்லியன் ரூபா பெற்றது.

முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னாகொடவும் 18 மில்லியன் ரூபா பெற்றதாகப் பட்டியலிடப்பட்டுள்ளது.

முன்னாள் அமைச்சர் லக்ஷ்மன் செனவிரத்னவின் மகனுடன் தொடர்புடைய ஒரு நிறுவனம் 37.5 ரூபா மில்லியனைப் பெற்றது.

அதே நேரத்தில் முன்னாள் அமைச்சர் மஹிந்த அமரவீரவின் சகோதரருடன் தொடர்புடைய நிறுவனம் 48.1 மில்லியனைப் பெற்றது. இவ்வாறு நிதி மோசடி செய்தவர்களுக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்துள்ளார். (ம-7)

# கடல்வழியாக நாட்டுக்குள் பாரியளவு ஐஸ் போதைவஸ்து கடத்தல் முயற்சி

## முறியடித்து அதிரடி காட்டிய பொலிஸார்

கிரிந்த கடற்பகுதி வழியாக, கப்பலொன்றில் கடத்தி வரப்பட்ட பாரியளவிலான ஐஸ் போதைப்பொருள் நாட்டுக்குள் பிரவேசிக்க முன்னர் பொலிஸாரால் அதிரடியாகக் கைப்பற்றப்பட்டதுடன் ஏழு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களிடமிருந்து 329 கிலோகிராம் ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ள நிலையில் அதன் மதிப்பு சுமார் 394 மில்லியன் ரூபாய் எனக் கணிக்கப்பட்டுள்ளது.

தென் மாகாணத்திற்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரின் வழிகாட்டுதலுக்கமைய, மேல் மாகாண வடக்கு குற்றப் பிரிவினரால், முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கைகளுக்கமையவே இந்தக் கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய 06 வாகனங்கள் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைக்காக சந்தேகநபர்கள் பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பணியகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் தடுப்புக்காவல் உத்தரவுகளைப் பெறுவதற்காக திஸ்ஸமஹாராம நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸ் போதைப் பொருள் பணியகம் தீவிர விசாரணைகளை முடுக்கிவிட்டுள்ளது. (ம-7)

# இராஜபத்மினி அரங்காலயத்தில் நீரிழிவு விழிப்புணர்வு நிகழ்வு

சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் NCGE 75-76 ஆம் தொகுதி மாணவ உறவுகளின் (VIBER FAMILY) அனுசரணையில், சக்கரம் சமூக அபிவிருத்திக்கான கலைமன்றம் ஏற்பாடு செய்துள்ள சர்வதேச நீரிழிவு விழிப்புணர்வு தினமும் பரிசளிப்பு நிகழ்வும் இன்று (14) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் கைதடி நாவற்குழி, தெற்கு எனும் முகவரியில் அமைந்துள்ள இராஜபத்மினி அரங்காலயத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலை மருந்தாளர் சு.சிவசுப்ரமணியம் தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வில்,

பிரதமவிருந்தினராக ஓய்வுநிலை சுகாதார வைத்திய அதிகாரி சுதோகுமார் அவர்கள் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

இந்நிகழ்வில் கடற்கன்னி "வருந்தி அழைத்த வருத்தம்" மேடை நாடகம் உள்ளடங்கலாக பல விசேட கலை, கலாசார நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன. (ம-7)

# நல்லூர் சிவன் கோவிலில் இயமசம்ஹார உற்சவம்

நல்லூர்சிவன் கோவில் எனப் போற்றப்படும் நல்லூர் ஸ்ரீகமலாம்பிகா சமேத ஸ்ரீகைலாசநாத சுவாமி தேவஸ்தானத்தில் ஸ்ரீம்ருத்யுஞ்ஜய பூசையுடனான இயம சம்ஹார உற்சவமானது ஐப்பசி வெள்ளி நன்நாளான இன்று மாலை 5.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

அதன் பிரகாரம் காலை 9.00 மணிக்கு ஸ்ரீகைலாசநாதப் பெருமானுக்கு 108 சங்காபிஷேகமும் மாலை 4.00 மணிக்கு ஸ்ரீமார்க்கண்டேயக்ருதம்ருத்யுஞ்ஜய சிவபூசையும் நடைபெறவுள்ளது.

தொடர்ந்து 5.00 மணியளவில் விசேட வசந்த மண்டப சோடச உபசாரங்களைத் தொடர்ந்து இயம சம்ஹார உற்சவமும் எம்பெருமானின் காலசம்ஹாரமூர்த்தி தரிசனமும் சிறப்புற நடைபெறவுள்ளது. (ம-7)

# பேராறு நீர்த்தேக்க நீர் பருகுவதற்கு உகந்தது

## அதிகாரபூர்வ தகவல் வெளியீடு

(வவுனியா)

பேராறு நீர்த்தேக்கத்தின் நீரைப் பருகுவதால் எந்தவித ஆபத்துமில்லை என வவுனியா மாவட்ட நீர் விநியோக வடிகால மைப்பு அதிகார சபையின் பொறியியலாளர் உறுதிப்படுத்தியுள்ளார்.

கடந்த புதன்கிழமை (12) முதல் பேராறு நீர்த்தேக்கத்தில் மீன்கள் இறந்து கரை ஒதுங்குவது அவதானிக்கப்பட்டது. இது மக்கள் மத்தியில் ஒருவித அச்சத்தை ஏற்படுத்தியிருந்தது.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த பொறியியலாளர், மீன்கள் இறப்பதற்குக் காரணம் காலநிலை மாற்றம் மட்டுமே, நீரின் தரத்தில் எந்தவிதப் பிரச்சினையும் ஏற்படவில்லை என்றார். (ம-7,250)

வடமாகாண மரநடுகை மாதம்
கார்த்திகை 01 - 30, 2025

'சாகுமுன் உன் பாட்டன் நாட்டிய பழமரங்களைக் கேட்டுப்பார், உனது பரம்பரையின் கனவுகளை இன்னமும் அது வைத்திருக்கக்கூடும்'



கவிஞர் வ.ஐ.ச.ஜெயபாலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விருந்தோம்பல்

விருந்தோம்பல் என்பது இல்லற வாழ்க்கையிலே செய்ய வேண்டிய ஓர் இனிய அறமாகும். தமிழர் பண்பாட்டிலே இருவகையான விருந்தினர்களை ஓம்புவது மரபாக உள்ளது. ஒன்று கட்புலனாகாதாரை நினைத்து செய்வது. மற்றையது நேரில் வருகை தருவோரை ஓம்புவது இல்லற வாழ்க்கை என்பதே வீட்டிற்கு வருகின்ற விருந்தினரை ஓம்புகின்ற நல் வாழ்க்கையாகும். ஆனால் அத்தகைய வாழ்க்கையை வாழும் போது சில வரன்முறைகளும் பேணப்பட்டன. அவற்றுள் முதன்மையானது ஒரு விருந்தினர் வீட்டிற்கு வெளியே வந்து காத்து நிற்கும் போது வீட்டிலுள்ளவர்கள் வீட்டினுள்ளே இருந்து உணவு உண்ணக் கூடாது என்பதாகும்.

விருந்தோம்பலால் என்ன பயன் கிடைக்கும் என்று எண்ணுபவர் பலர் உளர். தன்னுடைய வீட்டிற்கு ஒவ்வொரு நாளும் வருகை தரும் விருந்தினர்களை மகிழ்வோடு வரவேற்று விருந்தளிப்பவர் வாழ்க்கையிலே வறுமை ஒரு போதும் வராது. செல்வமே செழித்து ஓங்கும். விருந்தினரை நாள் தோறும் பேணுபவனுடைய இல்லத்திலே திருமகள் மன மகிழ்ச்சியோடு வந்து குடியிருப்பாள். விருந்தினர் மனம் மகிழ உணவு கொடுத்து மிகுதியை உண்பவனுடைய விளைபுலத்திற்கு வித்திட வேண்டிய தேவை இல்லை. இவையே இன்றைய வாழ்வியல் நிலையிலே பெறும் பயனாகும்.

இன்னொரு சிறப்பு என்னவென்றால் தன்வீட்டிற்கு வந்த விருந்தினரைப் பேணிய பின்பு மேலும் விருந்தினர் வரவை எதிர்பார்த்து இருக்கின்றவன் மறுபிறப்பிலே தேவருலகிலே உள்ளவருக்கு நல்லதொரு விருந்தினனாகச் செல்லும் வாய்ப்பைப் பெறுவார். இது விருந்தோம்பல் மறுமைக்கும் பயன்தரும் என்பதையும் நன்கு உணர்ந்திருக்கிறது. விருந்தோம்பல் ஒரு வேள்வி செய்வதைப் போன்றது. வேள்வியின் பயன் அளவற்றது. அது போலவே விருந்தோம்பலால் ஏற்படும் பயனும் அளவற்றது.

விருந்தோம்பல் செய்யாதவர் தமது உடைமைகளில் பற்றுள்ளவர்களாவர். ஆனால் தம்முடைய உடைமைகளை இழக்கும் போது மிகவும் துன்பப்படுவர். அவர்களுக்கு வேள்வி செய்யும் பயனும் கிட்டாது. பொருள் வைத்திருப்போர் விருந்தோம்பல் செய்வோரை எள்ளி நகையாடுவர். அவர்கள் அறிவற்றவராவர். விருந்தோம்பல் என்னும் பண்டைத் தமிழர் பண்பாடு பற்றி வள்ளுவர் திருக்குறளிலே ஓர் அதிகாரம் அமைத்துள்ளார். விருந்தோம்பலின் சிறப்பையும் அதைச் செய்யாது இருந்து ஏற்படும் குற்றங்களையும் அவர் தெளிவாகக் குறட்பாக்களிலே விளக்கியுள்ளார்.

அவர் தனித்துவமாக ஒரு கருத்தையும் அங்கு பதிவு செய்துள்ளார். பூக்களிலே அனிச்சம் பூ என ஒரு பூ உண்டு அதற்குரிய சிறப்பியல்பும் ஒன்று உள்ளது. அனிச்சம்பூ முகர்ந்தால் வாடிவிடும் இயல்புடையது. அதேபோல எமது வீட்டிற்கு வருகை தருகின்ற விருந்தினரும் அவரை நாம் முகமலர்ச்சியோடு வரவேற்காவிடின் முகம் வாடி விடும் இயல்புடையவர். எனவே விருந்தினரை முக மலர்ச்சியோடு வரவேற்க வேண்டும்.

விருந்தோம்பலுக்கு இனிய சொற்களைப் பேசும் ஆற்றலும் இன்றியமையாதது. விருந்து என்பது புதிதாக முதன் முதலாக வருகை தருபவரையே குறிக்கும். எனவே புதிதாக வருபவரைக் கண்டால் முக மலர்ச்சியுடன் வரவேற்கும் மனப்பாங்கு எல்லோரிடமும் இருக்கவேண்டும். எனவே தமிழர் பண்பாட்டில் விருந்தோம்பல் என்பது தனித்துவமான செயற்பாடாக விளங்கியதை வையகம் அறிய வேண்டும் என்பதே வள்ளுவருடைய கருத்தாக உள்ளது.

ஓம்பல் என்ற சொல் கூர்மையான பொருள் தருவது. வந்தவருடைய தகுதிப்பாடு பற்றி ஆராயாமல் அவருடைய வருகையின் சிறப்பை உணர்த்துவதே இச் சொல்லின் பொருளாகும். அதனால் தான் "விருந்தோம்பல்" வேள்வி செய்வதை விட மேலான செயற்பாடாகத் தமிழர் பண்பாட்டு மரபாகப் பேணப்பட்டு வருகிறது. எனவே விருந்தோம்பல் என்பது வெறுமனே உணவளிக்கும் பணியன்று. பசி தீர்க்கும் பணியாக மட்டுமன்றி வந்தவரை வரவேற்று தம்மில் ஒருவராக இணைத்து உணவளித்து மகிழ வேண்டும் என்பதே அதன் பொருளாகும்"

விருந்தோம்பல் பற்றிய பிறிதொரு செய்தியும் உண்டு. இல்லறம் செய்வோர் இப்பணியைச் செய்ய வல்லவர். உழவுத் தொழில் செய்யும் இல்லறம் செய்வோர் விருந்தினரை வரவேற்க எப்போதும் அணியமாக இருப்பர். மேலை நாட்டுப் பண்பாட்டின் செல்வாக்கால் இந்நிலை தற்போது மாற்றம் அடைந்து வருகிறது. ஆனால் தமிழினத்திற்கு என்று தனியாக அமைந்த குணம் விருந்தோம்பலே எனின் மிகையாகாது.

வெள்ளி நற்சிந்தனை 13



முனைவர் ச.மனோன்மணி

## ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3340

**டியானா**

என்ன அதுக்குள்ள கலெண்டர் கொடுக்க ஆரம்பிச்சிட்டாங்கள் இப்ப தானே 2025 New year celebrate பண்ணினோம்



**அக்ஷி**

பசிக்காத கடவுளுக்கு
நூறு ரூபாய்
காணிக்கையும்,
பசித்தவனுக்கு ஒரு
ரூபாய் பிச்சையும் தரும்
படித்த முட்டாள் சமூகம்
இது.

**கவிஸ்னா**




**டெனின்**


மனைவி: நேற்றைக்கு யாரோ ஒரு பெண்ணோட சினிமாவுக்கு போனீங்களாமே?
கணவன்: இப்போது வருகிற படங்கள் குடும்பத்துடன் பார்க்கிற மாதிரியா இருக்கு

**ஜெனோ**

இதற்கு பேர்தான் Single shirt




**தனுசா**




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியாவில்...

குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸாருக்குக் கிடைத்த விசேட தகவலையடுத்து வவுனியாவின் பல்வேறு இடங்களில் மேற்கொள்ளப்பட்ட விசேட நடவடிக்கையின்போது குறித்த 4 இளைஞர்கள் போதை மாத்திரைகளுடன் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவர்களிடம் இருந்து 150 போதை மாத்திரைகள் மீட்கப்பட்டுள்ளன.

அந்தவகையில், திருநாவற்குளம் பகுதியைச் சேர்ந்த ஒரு இளைஞரிடம் இருந்து 80 போதை மாத்திரைகளும், அதே பகுதியைச் சேர்ந்த மற்றுமொரு இளைஞரிடம் இருந்து 30 போதை மாத்திரைகளும் மீட்கப்பட்டுள்ளன.

அத்துடன், அண்ணாநகர் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவரிடம் இருந்து 20 போதை மாத்திரைகளும் லக்சபானா வீதி, கத்தார் சின்னக்குளம் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவரிடம் இருந்து 20 போதை மாத்திரைகளும் மீட்கப்பட்டுள்ளன.

இதனையடுத்து குறித்த நான்கு இளைஞர்களும் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டுள்ளனர். (ம-7,250)

## யாழ்.கலட்டிப்...

இளைஞர்களைக் கைது செய்து சோதனையிட்ட வேளை அவர்களிடம் இருந்து 50 போதை மாத்திரைகள் மீட்கப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட மூவரும் 20 மற்றும் 22 வயதுடையவர்கள் எனவும் மூவரையும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்து வருகிறோம் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-7,33,104)

## தொல்.திருமா...

இந்தியப் பாராளுமன்ற உறுப்பினரும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவருமான முனைவர் தொல்.திருமாவளவன் நேற்று (13) முள்ளிவாய்க்கால் நினைவிடத்திற்குச் சென்று உயிரிழந்த உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தினார்.

முல்லைத்தீவு மாவட்டத்திற்கான திடீர் வருகையின்போது அவரை அப்பகுதிப் பொதுமக்கள் வரவேற்று, பொன்னாடை போர்த்தி மரியாதை செய்தனர்.

அதனைத் தொடர்ந்து, கவிஞர் யோ.புரட்சி அவர்கள் தன்னுடைய "ஆயிரம் கவிதைகள்" நூலை தொல்.திருமாவளவனிடம் கையளித்தார்.

பின்னர் திருமாவளவன் முள்ளிவாய்க்கால் நினைவு முற்றம் சென்றடைந்து, அங்கு அமைக்கப்பட்டுள்ள உறவுகளுக்கான பொதுத் தூபிக்கு மலர் மாலை அணிவித்து, மரியாதை செலுத்தினார்.

முள்ளிவாய்க்காலில் உயிரிழந்த தமிழர்களை நினைவுகூரும் வகையில் நடைபெற்ற இந்த நிகழ்வு, உள்ளூர் மக்களிடையே பெரும் உணர்ச்சிபூர்வமான சூழலை ஏற்படுத்தியிருந்தது. (ம-7,299)

## பல குற்றச்...

பொலிஸ் குழுவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவல்களுக்கு அமைய குறித்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

நாவற்குழிப் பகுதியைச் சேர்ந்த 21 மற்றும் 23 வயதுடைய இரண்டு இளைஞர்கள் 3700, 3500 மில்லிக்கிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்ய முற்பட்ட வேளை பொலிஸாரை வாளினால் வெட்டமுற்பட்டதாகவும் அதில் ஒரு சந்தேக நபர் 25க்கு மேற்பட்ட வழக்குகளுடன் தொடர்புடையவர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-7,33)

## கயிறு கட்டி...

இதில் கம்பர்மலை சத்திரத்தையைச் சேர்ந்த நிறைஞ்சன் நிறக்சன் (வயது-18) என்ற இளைஞனே உயிரிழந்தவராவார்.

மேற்படி இளைஞன் தனது ஐந்து நண்பர்களுடன் நேற்று வியாழக்கிழமை (13) மதியம் கிணற்றில் கயிறு கட்டி நீந்தியுள்ளார். ஏனையவர்கள் வெளியேறிய நிலையில் குறித்த இளைஞன் மட்டும் தொடர்ந்து நீராடியுள்ளார்.

அவரை வருமாறு ஏனையவர்கள் அழைத்துள்ளனர். குறித்த இளைஞன் சிறிது நேரத்திற்குப் பிறகு வருவதாகக் கூறியுள்ளார்.

நீண்ட நேரமாகியும் குறித்த இளைஞனைக் காணாததால் ஏனையவர்கள் மீண்டும் அங்கு சென்று பார்த்தபோது கயிறு அறுந்த நிலையில் அங்கு இளைஞனைக் காணவில்லை.

ஏனையோரின் உதவியுடன் தோட்டக் கிணற்றில் தேடியபோது இளைஞன் சடலமாக மீட்கப்பட்டார்.

உயிரிழப்புத் தொடர்பான மரண விசாரணையைக் கரவெட்டி திடீர் மரண விசாரணை அதிகாரி வே.பாஸ்கரன் மேற்கொண்டார்.

உயிரிழந்த இளைஞனின் சடலம் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பாக வல்வெட்டித்துறைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,33,60)

## வடக்...

தெரிவித்துள்ளது.

நாட்டின் கிழக்குத் திசையில் கீழ் வளிமண்டலத்தில் குழப்ப நிலை உருவாகி வருவதாக வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதன் காரணமாக, எதிர்வரும் 36 மணித்தியாலங்களுக்குள் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தற்போது நிலவும் மழை நிலைமை மேலும் எதிர்பார்க்கப்படுவதாக அந்தத் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது. (ம-7)

## நாடு...

நபர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

பொலிஸ்மா அதிபரின் அறிவுறுத்தலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் கீழ் நேற்றைய தினம் 1,087 சோதனைகள் நடத்தப்பட்டுள்ளன.

இதன்போது 731 கிராம் ஐஸ், 165 கிராம் ஹெரோயின் மற்றும் 33 கிலோகிராம் கஞ்சாவும் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டன.

மேலதிகமாக 36,120 கஞ்சாச் செடிகள், 1,400 மெத்தம்பேட்டமைன் மாத்திரைகளும் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டன. (ம-7)

## துசிதவுக்கு பிடியாணை

தேசிய லொத்தர் சபையின் முன்னாள் பணிப்பாளரான துசித ஹலொலுவுக்கு எதிராக கொழும்பு மேலதிக நீதிவான் நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளது.

தாம் பயணித்த வாகனம் மீது சிலர் துப்பாக்கிச் சூடு நடத்தியதாகக் கூறி, போலியான முறைப்பாடு செய்த சம்பவம் தொடர்பில் சந்தேக நபராக துசித பெயரிடப்பட்டிருந்தார்.

இந்த வழக்கில் நேற்று அவர் ஆஜராகாத நிலையில் அவரைக் கைது செய்து நீதிமன்றில் ஆஜர்படுத்துமாறு நீதிவான் பிடியாணை பிறப்பித்து உத்தரவிட்டுள்ளார். (ம-7)


மஹஜன சம்பத — திகதி 2025.11.13 — சீட்டிழுப்பு இலக்கம் 6012 — K 3 3 9 8 8 5
அத சம்பத — K 9 8 8 5 — சீட்டிழுப்பு இலக்கம் 0587
சுப தவசக் — 2025.11.13 — 128 — தனுசு 24 39 48 — 7308
தன நிதானய — திகதி 2025.11.13 — சீட்டிழுப்பு இலக்கம் 2042 — W 09 32 61 76 W
மெகா பவர் — திகதி 13/11/2025 — சீட்டிழுப்பு இலக்கம் 2360 — B 13 01 47 48 69
ஜய — திகதி 2025.11.13 — சீட்டிழுப்பு இலக்கம் 0280 — Q 5 4 8 1
கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 4254 — சீட்டிழுப்பு திகதி 13.11.2025 — G 05 26 47 60 — G
ஹந்தஹன — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2025.11.13 — சீட்டிழுப்பு இலக்கம் 1321 — இடபம் 21 32 35 50 இடபம்
சுபிரி வாசனா சம்பத — உத்தியோகபூர்வ முடிவுகள் — 13.11.2025 — 0720 — B 2 4 2 8 0 9 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.28,544,506.00
SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 2986 — சீட்டிழுப்பு திகதி 2025.11.13 — தினம் வியாழக்கிழமை — 07 09 27 35 P — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.74,708,252.80
சனிதா — 13.11.2025 — 5147 — 38 46 56 79 D — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.65,466,343.20
சசிரி — 816 — 13.11.2025 — வியாழக்கிழமை — 07 10 43 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ.2,000,000.00
ராசி — சீட்டிழுப்பு வாரம் 4698 — சீட்டிழுப்பு திகதி 13.11.2025 — தினம் வியாழக்கிழமை — 39 43 52 61 — மகரம் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.5,652,121.20
கப்ருக — 2162 — 13.11.2025 — K 12 21 25 43 52 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.606,892,118.00
அட கோடிபதி — வியாழக்கிழமை — 2812 — 2025.11.13 — 13 28 46 65 M — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.58,136,069.60


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாகன இறக்குமதி வரிகளால் கிட்டிய மேலதிக வருமானம்

2025 ஆம் ஆண்டில் வாகன இறக்குமதி வரிகள் மூலம் எதிர்பார்க்கப்பட்ட வருமானத்தை விட ரூபா 100 பில்லியனுக்கும் அதிகமான மேலதிக வருமானம் ஈட்டப்பட்டுள்ளதாகப் பாராளுமன்றத் தொடர்பாடல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் 2026 ஆம் ஆண்டிற்கான எதிர்கால நிதிசார் திட்டங்களை தயாரிப்பது இலகுவாகியுள்ளது.

எனினும் வாகன இறக்குமதி வேகம் குறைவடைவதன் காரணமாக 2026 ஆம் ஆண்டில் வருமான அதிகரிப்பு வேகமும் குறைவடையும் என எதிர்பார்க்கப்படுவதாக அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-7)

## 'ஐஸ்'...

கடந்த 2022 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் குறித்த நபர் ஐஸ் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டிருந்தார்.

இது தொடர்பான வழக்கு மன்னார் மேல் நீதிமன்ற நீதிபதி எம். மிஹால் அவர்களின் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில் வழக்குத் தொடுநர் தரப்பிற்காக அரச சட்டவாதி ஆறுமுகம் தனுஷன் அவர்கள் ஆஜராகி வழக்கினை நெறிப்படுத்தினார்.

எதிரி தரப்பிற்காக ஜனாதிபதி சட்டத்தரணி யு.ஆர்.டி சில்வா அவர்கள் ஆஜராகியிருந்தார்.

வழக்கு விசாரணைகளின் முடிவில், வழக்குத் தொடுநர் தரப்பினால் முன்வைக்கப்பட்ட சாட்சியங்களின் அடிப்படையில், எதிரி மீதான குற்றச்சாட்டு நியாயமான சந்தேகத்திற்கு அப்பால் நிரூபிக்கப்பட்டதாக மன்று ஏற்றுக்கொண்டது.

இதனையடுத்து, எதிரியை குற்றவாளியாக அறிவித்த நீதிபதி மிஹால் அவர்கள், எதிரிக்கு ஆயுள் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார். (ம-7,285)

## இரண்டாம்...

அநுரகுமார திஸாநாயக்க கடந்த 7ஆம் திகதி வரவு - செலவுத் திட்டத்தை முன்வைத்தார். இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் 8 ஆம் திகதி ஆரம்பமானது.

இன்று 14ஆம் திகதி வரை விவாதம் நடைபெறும். இன்று மாலை இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு நடத்தப்படும்.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன என்பன பாதீட்டுக்கு எதிராக வாக்களிக்கும் எனத் தெரியவருகின்றது.

தமிழ்த் தேசியக் கட்சிகள் தமது நிலைப்பாட்டை இன்று அறிவிக்கவுள்ளன.

அதேவேளை, அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பான குழுநிலை விவாதம் நாளை 15 ஆம் திகதி ஆரம்பமாகும்.

பாதீடு மீதான இறுதி வாக்கெடுப்பு எதிர்வரும் டிசம்பர் 5 ஆம் திகதி நடைபெறும். (ம-7)


**காணி உடன் விற்பனைக்குண்டு**

பலாலி வீதியுடனான கோண்டாவில் டிப்போக்கு அருகில் உள்ள VIP திருமண மண்டபத்திற்கு பக்கத்தில் உள்ள 7 பரப்புக் காணி சிறு துண்டுகளாகப் பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு. (5902)

**075 945 3391**

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

**வேலைவாய்ப்பு**

♦ கணனி தமிழ் ரைப்பிங் மற்றும் பக்க வடிவமைப்பு
அனுபவமுள்ளவர்கள் மற்றும் பயிலுனர்கள்
(பெண்கள் – பகல் கடமை
ஆண்கள் – இரவுக் கடமை)
♦ உதவி ஆசிரியர்கள்
(இரு பாலாரும்)
தகைமை : க.பொ.த உயர்தரம்
யாழ். நகருக்கு அண்மித்து இருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
தொடர்பு :
076 097 3121, 021 222 3378
வலம்புரி நாளிதழ்,
இல.191, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம். பொது முகாமையாளர்

**விற்பனைக்கு**

Forklift Komatsu 2 ton (petrol)
வாகனம் விற்பனைக்குண்டு.
தொடர்பு :
**076 097 3121** (க)

**உடனடி வேலைவாய்ப்பு**

நிர்வாக உத்தியோகத்தர்



விமான பயணச்சீட்டுக்கள் | விரைவு பொதிகள் சேவைகள் | விசா சேவைகள்
40 வயதிற்குட்பட்டோர் விண்ணப்பிக்கலாம் (ஆண்கள் விரும்பத்தக்கது)
வெளிமாவட்டங்களில் வேலை செய்ய விரும்புவோருக்கு முன்னுரிமை வழங்கப்படும் (தங்குமிடம் வழங்கப்படும்)
சம்பளம் 30,000/- இலிருந்து 50,000/-
எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம் (Metro Branch), சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை (C-4327)
V2 TRAVELS 076 1410725, 076 8226236
v2vacancies@gmail.com

**கனடா - வரி இல்லாமல் விரைவு பொதிகள் சேவை**

5-9 Kg 3710/-
11-16 Kg 2640/-
21-27 Kg 2430/-
குறைந்த விலை -நிறைந்த சேவை
கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
14 நாட்களில் Delivery (C-4327)
UK 11Kg - 1390/- | France 11Kg - 2160/- | Germany 11Kg - 2010/-
Swiss 11Kg - 2500/- | Australia 11Kg - 2150/- | Italy 11Kg - 2280/-
எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம் (Metro Branch), சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை
V2 TRAVELS 076 822 6241, 076 822 6237

**NORTHERN UNI**
EXPERIMENT. EXPERIENCE. EXCEL
IFSLS
விண்ணப்பித்து விட்டீர்களா!!
அரச வட்டியற்ற கடன்திட்டம்
(2022, 2023 மற்றும் 2024 ஆண்டு க.பொ.த உயர்தரப் பரீட்சையில் தோற்றிய மாணவர்களுக்குரியது)
SLIIT NORTHERN UNI இல் வழங்கப்படுகின்ற முழுநேர வாரநாள் பட்டப்படிப்புகள்
BSc (Hons) in Information Technology, Specialising in
- Artificial Intelligence
- Software Engineering
- Data Science
- Information Technology
- Cyber Security

BBA (Hons), Specialising in
- Accounting & Finance
- Business Analytics
- Human Capital Management
- Business Management
- Marketing Management
- Logistics & Supply Chain Management

விண்ணப்பங்கள் முடிவு திகதி 30.11.2025
விண்ணப்பிக்கும் முறை
- SLIIT NORTHERN UNI இல் கற்கைநெறியை ஆரம்பிப்பதற்கு: northernuni.lk/application-form
- கடன் திட்டத்திற்கு: www.studentloans.mohe.gov.lk

021 7534 807 | CONTACT VIA WHATSAPP 077 147 1471 (C-4326)


**காணி விற்பனைக்கு**

நீர்வேலிச் சந்தியில் வாய்க்கால் தரவைப் பிள்ளையார் கோவிலுக்கு அண்மையில் நல்ல சூழலில் 7 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (5913)

071 016 9768, 076 481 1296
076 917 0364, 077 437 0882

**கண்ணீர் அஞ்சலி**

எமது பாடசாலை ஆசிரியை திருமதி
ஸ்ரீலதா கோவிந்தராசா
அவர்களின் அன்புத் தந்தையார்
அமரர் வல்லி
சின்னத்தம்பி
மலர்வு 15.07.1939 | உதிர்வு 12.11.2025



அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தி பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!
சேவையாளர் சங்கம்
யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி (1702)

**தச்சு வேலையாட்கள் தேவை**

தொல்புரம் பகுதியில் உள்ள எமது தச்சுவேலை தொழிலகத்திற்கு சகல வேலைகளும் தெரிந்தவர்கள் உடனடியாகத் தேவை.
- சம்பளம் : 4000 – 5000 (நாள் ஒன்றுக்கு)
- நிரந்தரமான வேலைவாய்ப்பு உண்டு

தொடர்புகளுக்கு :
**077 213 7266, 071 110 0066** (1701)

**யாழ்ப்பாணத்தில் Voyzant**

10 பேர் கொண்ட குழுவில் ஒரு நபரிற்கு - 185,000/=
தென்னிந்திய ஆலய தரிசனம் 09 இரவுகள்/10 நாட்கள்
தமிழ்நாட்டில் பிரசித்தி பெற்ற 35 இற்கு மேற்பட்ட ஆலயங்கள் (மேலும் தனிப்பட்ட கோரிக்கைகளுக்கான சுற்றுலாப் பயணங்களும் மேற்கொள்ளப்படும்.)



மேலதிக விபரங்களுக்கு:
No:617&619, வைத்தியசாலை வீதி,
யாழ்ப்பாணம். (OLR Church இற்கு அருகில்)
077 284 9535, 021 222 6866
Voyzant(PVT)Ltd (5725)


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.11.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org